# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 14 செப்டம்பர் - 2001 இதழ் - 9



வெளியிடுவோர்

**கிறிஸ்துவின் சபையார்,**

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.
தமிழ்நாடு, இந்தியா

✆ 04257 - 20030 e-mail : kangayamcofc@eth

# அருமையான வாய்ப்பு

பரிசுத்த ஆவியானவரின் பணி (170 பக்கங்கள்) மற்றும் புதிய ஏற்பாட்டு ஆராதனை (112 பக்கங்கள்) ஆகிய நூல்கள், தரம் நிறைந்த தாளில் அழகாக அச்சிடப்பட்டு, மிக நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு, உங்களுடைய உபயோகத்திற்கு ஆயத்தமாக உள்ளது.

பிரசங்கிகளுக்கும், வேத ஆசிரியர்களுக்கும், வேத மாணவர்-களுக்கும், சபை அங்கத்தினர்களுக்கும் மிகவும் பயனுள்ள ஒன்று.

புத்தகம் முற்றிலும் இலவசம். ஆனால், தபால் செலவு உங்களைச் சார்ந்தது. அனுப்பப்படும் தொகை அளவுக்கு புத்தகங்கள் அனுப்பப்படும். அனுப்ப வேண்டிய குறைந்த பட்ச தொகை ரூ.20/-.

**தொடர்பு முகவரி**


**தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்**

தபால் பெட்டி எண் 27,

காங்கயம் - 638 701. இந்தியா.


குறிப்பு: M.O. கூப்பனில் உங்கள் முகவரியைத் தெளிவாக எழுதவும்.

# ஆசானின் அறிவுரையிலே...


1. ஆசிரியர் உரை 1
2. உங்களுக்காக நான்கு வேதாகமக் கேள்விகள் 10
3. **காங்கேயம் வாருங்கள் - அக்டோபர் 25, 26** 13
4. பெண்கள் பகுதி 14
5. வாலிபர் பகுதி 18
6. யோபு ஒரு கண்ணோட்டம் 21
7. சிறுவர் பகுதி 22
8. ஒவ்வொரு பிராந்திய..... 24
9. புதிய வாழ்க்கை 29

# THIRUMARAI AASAAN

**Published by Church of Christ**

**Editor** — ***S. RAJANAYAGAM***
**Honorary Editor** — ***J.C. CHOATE***

Dharapuram Road, Kangayam - 638 701, Tamil Nadu, India

**Pleading for the restoration of pure New Testament Christianity**

**Vol.14 September 2001 Issue-9**

*ஆசிரியர் உரை*

# இயேசு இல்லாப் பயணம்

பொதுவாகவே, பயணங்கள் பற்றிப் பல பார்வை உண்டு. அவரவர் தத்தம் நிலைகளில் நின்று இப்பூமியில் தங்கள் பயணம் பற்றிய பார்வையை அமைத்துக் கொள்கின்றனர். இவர்களெல்லோரையும் நாம் இரண்டு வகையாகப் பிரித்து விடலாம். முதல் வகையினர், மாம்ச எண்ணங் கொண்டவர்கள். மற்றவர்கள், ஆவியின் சிந்தையுடையவர்கள். மாம்ச எண்ணங்கொண்டவர்கள், பூவுலகப் பயணங்கள் ஒருபோதும் முடிவதில்லை என்று பலமாக வாதிடுவர். ஆவியின் சிந்தையுள்ளவர்களோ, அது அப்படியல்ல, முடிந்தே தீரும் என்று அடித்து ஆதாரத்துடன் சொல்வர். இவர்களின் கருத்துக்கள், இப்படி கடுமையாக வேறுபடுவதற்குக் காரணம், பயணங்கள் பற்றிய இவர்களின் அடிப்படைக் கண்ணோட்டமே. ஆவியின் சிந்தையுடையவர்களின் அணுகுமுறை, மாம்ச எண்ணங்கொண்டவர்களோடு ஒரு போதும் இசைந்து போகாது. சொல்லப் போனால், அது இசைந்து போகவும் கூடாது.

நம்முடைய இரட்சகராகிய இயேசுக் கிறிஸ்து, பிறந்து வாழும்படியான பாக்கியம் பெற்ற, பெலஸ்தீனா தேசத்தின் எல்லைகளுக்கிடையிலான அதிக பட்ச தூரமே 200 மைல்கள் தான். இப்படியொரு, சின்னஞ்சிறு தேசத்தில் பிறந்த அவர், ஒரு மூலையில் முடங்கிக் கிடந்து தன்னுடைய நாட்களைக் கழிக்காமல், அத்தேசம் முழுவதும் நன்மை செய்கிறவராய்ச் சுற்றித் திரிந்தார். (அப்.10:32) அப்படியானால், அவர் தன்னுடைய பூலோக வாழ்க்கையில் மேற்கொண்ட பயணங்கள், பட்டியலிட முடியாத அளவுக்கே இருந்திருக்க வேண்டும். ஆகவே, அவருடைய ஒட்டுமொத்த பயணங்கள் பற்றிய நம்முடைய பார்வையைச் செலுத்த நாம் விரும்பினால், அது முடிவில்லாத ஒன்றாகப்

போய்விடுமாகையால், அம்முயற்சிக்கு நாம் முதுகு காட்டிவிட்டு, நம்முடைய காரியத்தில் கவனம் செலுத்துவோம்.

இயேசுவானவர் தமது 12-வது வயதில், தன்னுடைய பூமிக்குரிய பெற்றோர்களுடன் எருசலேமுக்கு மார்க்கப் பயணம் மேற்கொண்டார் என்று லூக். 2:41-52 வசனப் பகுதியில் காணலாம். இப்பயணம், அவர் தமது வாழ்க்கையில் மேற்கொண்ட முதல் தூரப் பயணமாக இருக்கக்கூடும். ஒரு யூத ஆண் குழந்தை, தனது 12-ம் வயதை எட்டும்போது, ''நியாயப்பிரமாணத்தின் மகன்'' என்ற சிறப்பான அந்தஸ்தைப் பெறுகிறான். அதுமுதல் அவன், நியாயப் பிரமாணத்தின்படி நடக்கக் கடமைப்படுகிறான். அப்படி, இயேசுவானவர் தமது 12-வது வயதை அடைந்த போது, பக்தியுள்ள யூதக் குடும்பத்தார் செய்யும் பொதுவான வழக்கத்தின்படியாக, தனது தாயாகிய மரியாளோடும், வளர்ப்புத் தந்தையாகிய யோசேப்போடும், உறவின் முறையாரோடும், மற்றும் ஊராரோடும், பஸ்கா பண்டிகையில் கலந்து கொள்வதற்காக எருசலேம் பட்டணம் சென்றார். ஏனைய எல்லோரோடும் சேர்ந்து மார்க்கக் கடமைகளை நிறைவேற்றிய இயேசுவானவர், ஊர் திரும்பும் நேரம் வந்த போது, மற்றவர்களுடன் தானும் சேர்ந்து கொள்ளாமல், எருசலேமிலேயே தங்கிக் கொண்டார்.

இதை அறியாத இயேசுவின் தாயும், யோசேப்பும், அவர் கூட்டத்திலிருப்பார் என்ற நம்பிக்கையுடன் பயணத்தை துவக்கி, ஒரு நாள் பயணத்தையும் முடித்து விட்டனர். ஒரு நாள் பயணம் என்பது, சுமார் 20 முதல் 30 மைல்கள் தூரம் கொண்டதாக இருக்கும். பயணப் பாதையில், குறைந்த பட்ச தூரம் கடந்தவுடன், போதுமான தண்ணீர் வசதி எங்கு கிடைத்தாலும் அங்கே அந்த நாளின் பயணத்தை முடித்துக் கொள்வர். ஆகவே, ஒரு நாள் பயண தூரம் என்பது கொஞ்சம் முன், பின் இருக்கும். இயேசு கூட்டத்திலிருப்பார் என்று அவர்கள் நினைத்ததற்கு பல காரணங்கள் இருந்திருக்கக் கூடும். அவரைக் கவனமாகப் பார்த்துக் கொள்ளும்படியான பொறுப்பை, குறிப்பிட்ட உறவுகளிடம் அவர்கள் விட்டிருக்கலாம் அல்லது தகுந்த நபரிடம் ஒப்படைத்திருக்கலாம் அல்லது ஒரு ஒழுக்கமுள்ள மகனாக அவர் வளர்ந்தபடியால், அங்குமிங்கும் போக மாட்டார் என்று எண்ணியிருக்கலாம் அல்லது அவருக்கு வயது வந்து விட்டபடியால் கவனிக்க அவசியமில்லை என்று கருதியிருக்கலாம். மொத்தத்தில், எப்படியோ இயேசுவானவர் அவர்களுடன் பிரயாணத்தில் இல்லை.

இப்படி, இயேசுவானவர் அவர்களுடன் இல்லாமல் போனது, பிள்ளையின் தவறு என்று சொல்வதைவிட, பெற்றோரின் கவனக் குறைவு என்று கூறுவதே சரியானது. எப்படியெனில், பயணத்திற்கான ஆயத்தமும், பயணத்திற்கென தங்களைச் சரி பார்த்துக்கொள்ளுதலும் இவர்களிடம் இல்லாமல் போய்விட்டது. பிரயாணம் போகிற எல்லோரும், தாங்கள் புறப்படுவதற்கு முன்பாக எல்லாம் சரியாக இருக்கிறதா என்று உறுதி செய்து கொள்ள வேண்டும். அப்படி உறுதி செய்வது பயண தூரத்தையும், பயணத்தின் தன்மையையும் கூடப் பயணிப்பவர்களையும் பொறுத்து, ஒரு முறைக்கு இரு முறையும், சில நேரங்களில் பல

முறையும் கூட இருக்கும். அதுவும் பிள்ளை, குட்டிகளுடன் செல்லும்போது கேட்கவே தேவையில்லை. பொருள்களைப் பற்றிய அக்கறை இரண்டாமிடத்திற்குத் தள்ளப்பட்டு, குழந்தைகளைப் பற்றிய கவலை முதலிடம் பெற்றுவிடும். ஆனால், இக்காரியத்தில் இயேசுவின் தாயும், யோசேப்பும் தங்கள் பங்கில் கோட்டைவிட்டது நன்றாகவே தெரிகிறது.

இருப்பினும், உண்மை நிலை தெரிந்தவுடன் பதறியடித்து அவரைத் தேடிக் கொண்டே எருசலேமுக்குச் சென்றனர். இங்கே வசனம் சொல்லுவதைக் கவனியுங்கள். ''அவர் பிரயாணக்காரரின் கூட்டத்திலே இருப்பாரென்று நினைத்து, ஒரு நாள் பிரயாண தூரம் வந்து, உறவின் முறையாரிடத்திலும் அறிமுகமானவர்களிடத்திலும் அவரைத் தேடினார்கள். காணாததினாலே, அவரைத் தேடிக் கொண்டே எருசலேமுக்குத் திரும்பிப் போனார்கள்'' (லூக். 2:44, 45) தேடிக்கொண்டு என்று வசனம் சொல்லாமல், **"தேடிக்கொண்டே"** போனார்கள் என்று கூறுகிறது. அதாவது, எதிர்ப்பட்ட எல்லாக் கூட்டத்திலும், கண்ணில் பட்ட எல்லோரிடத்திலும் தேடிச் சென்றுள்ளார்கள். ஆகவேதான், மரியாள், ''........ இதோ, உன் தகப்பனும், நானும் விசாரத்தோடே உன்னைத்தேடினோமே '' என்று அவரைக் கண்டபோது கூறியுள்ளாள்.

தேடிக்கொண்டு போன இயேசுவின் தாயும், யோசேப்பும் ''மூன்று நாளைக்குப் பின்பு,'' அவர் தேவாலயத்தில், போதகர் நடுவில் உட்கார்ந்திருக்கவும், அவர்கள் பேசுகிறதைக் கேட்கவும், அவர்களை வினாவவும் கண்டுள்ளார்கள் ''(2:46). தேவாலயத்தில் போதகர்கள், சற்று உயர்ந்த நாற்காலியில் அமர்ந்திருக்கவும், கற்றுக் கொள்கிறவர்கள் அவர்களின் பாதத்தருகே உட்கார்ந்து கவனிப்பதும் தான் அன்றைய நாளின் வழக்கம். ஆனால், வழக்கத்திற்கும், பாரம்பரியத்திற்கும் மாறாக, 12 வயதே நிரம்பிய இயேசுவானவர் போதகர் நடுவில், ஒரு பெரும்போதகர் போல உட்கார்ந்திருந்தார். அப்படியானால் அவருடைய ஞானமும், வேத வசனங்களில் அவருக்கிருந்த பரிச்சயமும் எந்தளவு இருந்திருக்க வேண்டுமென்று யூகித்துப் பாருங்கள். ''அவர் பேசக் கேட்ட யாவரும், அவருடைய புத்தியையும், அவர் சொன்ன மாறுத்தரங்களையுங் குறித்து பிரமித்தார்கள்.'' 2:47).

சரி, எருசலேமிலே இயேசு என்ன செய்தார் என்பது, இப்பயண ஆய்வின் நோக்கமல்ல. மாறாக, எருசலேம் பயணத்திலே, இயேசுவின் தாயும், யோசேப்பும், செய்ததைப் போன்ற பெருந்தவறுகள், இன்றைய கிறிஸ்தவத்தில் நடந்து கொண்டிருக்கிறதென்பதை எடுத்துக்காட்டி, அதைச் சீர்செய்ய முயற்சிப்பதே நமது குறிக்கோள்.

ஆம், எப்படி இயேசுவின் தாயும், யோசேப்பும், தங்கள் பயணத்தை ஆரம்பிக்கும்போது, தங்கள் பயணத்துக்கான அனைத்தும் சரியாக இருக்கிறதா என்று உறுதிசெய்து கொள்ளாமல், பயணத்தை மேற்கொண்டனரோ, அதுபோல், நிச்சயமாக, ஒரு நாளில் முடிந்து போகக் கூடிய (எபி.9:27), பூலோக வாழ்க்கை என்ற இப்பயணத்தை, ஆயத்தமில்லாமல், பயணத்திற்கான தேவைகள் பற்றி

அக்கறை கொள்ளாமல், இருப்பவைகள் போதுமா என்று உறுதி செய்து கொள்ளாமல், அநேகமாக அனைத்துக் கிறிஸ்தவர்களும் நடத்திக் கொண்டுள்ளனர். இப்படி நித்திய வாழ்வுக்கான பயணத்தை, போதுமான ஆயத்தமில்லாமல் ஏனோதானோ என்று நடத்திக் கொண்டிருப்பவர்களை, நாம் இயேசுவின் தாயாகிய மரியாளோடும், யோசேப்போடும் ஒப்பிடலாம். எப்படி அவர்களிருவரும் தங்கள் ஆயத்தமில்லா பயணத்தில், இயேசுவானவரைக் தவறவிட்டனரோ, அதைப்போல், நித்திய வாழ்வுக்கான பயணத்தை ஆயத்தமில்லாமல் மேற்கொள்பவர்கள், இயேசுவால் வாக்களிப்பட்ட பரம வாசஸ்தலமாகிய பரலோகத்தை, அந்நாளில் இழந்து போக நேரிடும். நித்திய வாழ்வுக்கான பயணத்திற்கு ஆயத்தம் மிகவும் அவசியம், ஆகவே, யோசேப்பு, மரியாள், இவர்களுடைய பயணத்தின் காரியங்களைக் கவனித்து, நமக்குப் பயன்படும் சில பாடங்களைக் கற்றுக் கொள்வோம்.

**I தங்கள் பயணத்தில் இயேசு இருப்பதாக நினைத்துக் கொண்டனர்** (V 44)

மரியாளும், யோசேப்பும் எருசலேமிலிருந்து திரும்பி வந்த பயணம், கற்றுத் தரும் முதல் பாடம், இயேசுவானவர் தங்களுடன் இல்லாமலே, அவர் தங்களுடன் இருப்பதாக ஒருவன் நினைக்க வாய்ப்புண்டு என்பது.

ஆம், அவர்களிருவரும், ஒரு நாள் பயண தூரத்தை முடிக்கும் வரை, உன்னதத்தின் அருளாள் கொடுக்கப்பட்ட தேவகுமாரன், தங்களுடன் பயணம் செய்து கொண்டிருப்பதாகவே எண்ணிக் கொண்டனர். ஆனால், உண்மை நிலை என்ன? இயேசுவானவர் அவர்களுடன் இல்லை. அவர்களோடு பயணம் செய்யவில்லை. அவர்கள் பயணம் இயேசு இல்லாத பயணமாகவே இருந்தது.

இப்படி, இயேசு தங்களுடன் இல்லாமலே அவர் இருக்கிறார் என்று எண்ணியதற்கு இரண்டு காரணங்கள் இருக்கமுடியும். முதலாவது, மற்றவர்கள் சொன்னதை அப்படியே ஏற்றுக் கொண்டது. அடுத்தது, உண்மையை உறுதி செய்யத் தவறியது. அவர்கள் செய்த இந்த இரண்டு தவறுகளினிமித்தம், அவர்கள் இயேசு இல்லாப் பயணத்தை மேற்கொள்ள நேர்ந்தது.

அருமையானவர்களே, இன்றைக்கு தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்கிற அநேகரின், ஆவிக்குரிய பயணம், இந்த யோசேப்பு, மரியாள் போன்றவர்களின் எருசலேம் பயணம் போன்றே உள்ளது. பரலோகத்திற்கான தங்களுடைய ஆவிக்குரிய பயணத்தில், இயேசுவானவரும், அவர் தந்த புதிய ஏற்பாட்டு உபதேசங்களும் அவர்களுடன் இல்லவே இல்லை. ஆனால் இயேசுவானவரும் தங்களோடிருக்கிறார், அவருடைய உபதேமும் தங்களோடிருக்கிறது என்ற **நினைப்பு** மாத்திரம் உள்ளது. தேவனுடைய காரியத்தில், வெறுமனே நினைப்பு மாத்திரம் வெற்றியைத் தந்து விடாது.

உதாரணமாக, இஸ்ரவேலர்கள் ஆயி பட்டணத்தின் மீது தொடுத்த போரை கவனித்துப் பாருங்கள் (யோசுவா.7ம் அதி), எரிகோ பட்டணத்தின் மீது அவர்கள்

பெரும் வெற்றி கண்டபோது, தேவன், அவர்களோடிருந்தார். ஆனால், தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படியாமல், சாபத்தீடானதில் துரோகம் செய்ததினால், ஆயி பட்டணத்தை மேற்கொள்ள அவர்கள் சென்றபோது, தேவன் அவர்களுடன் இருக்கவில்லை. ஆனால், இஸ்ரவேல் புத்திரர், தேவன் தங்களோடிருக்கிறார் என்று அவர்களாகவே நினைத்துக் கொண்டு, யுத்தத்திற்கு சென்று படு தோல்வியுடன் திரும்பி வந்தனர்.

இயேசுவானவரும், அவருடைய உபதேங்களும் தங்களுடன் சுத்தமாக இல்லாமலே, அவரும், அவைகளும் தங்களுடன் இருக்கிறது என்று நினைத்து, தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்பவர்களுக்கான மிகச் சிறந்த உதாரணம், மத்.7:21-23 வசனப் பகுதிதான். மலைப் பிரசங்கத்தின் ஒருபகுதியாக, இயேசு இந்த வசனங்களை வெளிப்படுத்தினார். கவனியுங்கள், **“அந்நாளில் அநேகர் என்னை நோக்கி ; கர்த்தாவே ! கர்த்தாவே ! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை. அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்”** என்பார். என்ன ஒரு பரிதாபம் பாருங்கள்! அநேகராகிய இவர்களெல்லாரும், தங்களுடைய இந்த பூமியின் பயணத்தில், இயேசுவானவர் தங்களுடன் இல்லாமலே, அவர் தங்களுடன் இருப்பதாக எண்ணி வாழ்ந்து, இறுதியில் ஏமாந்து போகிறவர்கள்.

இன்றைக்கு அநேகருடைய நிலை இப்படித்தான் இருக்கிறது. ஆனால், இயேசுவானவர் ஒருவனுடன் இருப்பதற்கு, கர்த்தாவே, கர்த்தாவே, என்று கூப்பிடுவது மாத்திரம் போதாது. மாறாக அவர் விதித்திருக்கிற நிபந்தனைகளுக்கு கீழ்ப்படிய வேண்டும். அது என்ன என்கிறீர்களா? அவரே சொல்வதைக் கவனியுங்கள். “... ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; **நாங்கள் அவனிடத்தில் வந்து, அவனோடே வாசம் பண்ணுவோம்”** (யோவான்.14:23). எவ்வளவு எளிமையான நிபந்தனை பாருங்கள். புதிய ஏற்பாட்டிலே அவர் வெளிப்படுத்தியுள்ள வசனங்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும் அவ்வளவு தான். அப்படிக் கீழ்ப்படிந்தால் அவர் நம்முடனே கூட இருப்பார்.

ஆகவே, அவர் நம்முடன் இல்லாமலே, இருக்கிறதாக நினைத்து, இந்த ஆவிக்குரிய பயணத்தை மேற்கொண்டு, இறுதியில் இழந்து போகாதபடி, அவருடைய புதிய ஏற்பாட்டு உபதேசங்களுக்குக் கீழ்ப்படிந்து, அவர் நம்முடன் வாசம் செய்ய அனுமதித்து, நித்திய வாழ்வைப் பெற்றுக் கொள்வோம்.

**II தங்கள் பயணத்தில் இயேசுவைத் தவறான இடத்தில் தேடினர்; (V.44)**

மரியாளும், யோசேப்பும் எருசலேமிலிருந்து திரும்பி வந்த பயணம், கற்றுத்தருகின்ற இரண்டாவது பாடம், இயேசுவானவரை. அவர் இல்லாத இடத்தில் ஒருவன் தேட வாய்ப்புண்டு என்பது.

நமது பகுதிக்கான, வேத வசனங்களை கவனித்துப் பார்த்தால், இயேசுவானவரை மூன்று நாளைக்குப் பின்னே, தேவாலயத்தில் கண்டு பிடித்தார்கள் என்றுள்ளது. அதாவது, கடைசி முயற்சியாக, எதற்கும் அங்கு பார்க்கலாம் என்று போனபோது, அவர் அங்கே இருந்துள்ளார். இவர்களிருவருடைய கணக்கும், எதிர்பார்ப்பும், இயேசுவானவர் தேவாலயத்தில் இருக்க மாட்டார் என்பது. ஆகவே, அவர் எங்கே இருக்கக்கூடும் என்று அவர்கள் நினைத்தனரோ, அங்கே அவரை முதலில் தேடினர். ஆம், அவரை பிரயாணக்காரரின் கூட்டத்தில் தேடினார்கள். அதன் பின்பு, எருசலேம் வந்து, ஒரு நாளெல்லாம், தங்கள் அறிவின்படி, பல இடங்களில் தேடி, பின்பு தேவாலயத்தில் கண்டுபிடித்தனர்.

அன்பானவர்களே, அங்கே மரியாளும், யோசேப்பும் செயல்பட்ட விதம், இன்றைய கிறிஸ்தவர்களின் செயல்பாட்டை அப்படியே பிரதிபலிப்பதாக உள்ளது. ஆம், இன்றைய யதார்த்த சூழலை அப்படியே எடுத்துக்காட்டுகிறது. கிறிஸ்துவைத் தேட விரும்புகிறவர்கள், அவருடைய உபதேசத்தைப் பின்பற்ற விரும்புகிறவர்கள், அவரும், அவருடைய உபதேசமும் எங்கு இல்லையோ அங்கு தேடி அலைந்து கொண்டுள்ளார்கள். யோசேப்பும், மரியாளும், அவரை, பிரயாணக்காரரின் கூட்டத்தில் தேடினது போல, மக்கள் பெருமளவில் கூடுகின்ற இடங்களில் அவரும், அவருடைய உபதேசமும் இருக்குமென்று நினைக்கின்றனர். அவர்கள் உறவின் முறையாரிடத்தில் தேடினது போல தங்களுக்கு வேண்டப்பட்ட, தங்கள் அபிமானிகளாக இருக்கும் குருமார்கள் மற்றும் பாஸ்டர்களிடத்தில், மற்றும் அவர்கள் செய்யும் உபதேசங்களில், அவர் இருப்பார் என்று நினைக்கின்றனர். இன்னும் அவர்கள், அறிமுகமானவர்களிடத்தில் தேடினது போல, அநேகரால் அறியப்பட்ட, வரம் பெற்றவர்கள் என்று தங்களுக்குத் தாங்களே அழைத்துக் கொள்வோர்களிடத்தில், அவரும், அவருடைய உபதேசமும் இருக்குமென்று நினைக்கின்றனர். ஆனால், மரியாளும், யோசேப்பும் தங்கள் அறிவின்படியாகச் செய்த முயற்சிகள் எல்லாம் எப்படி வீணானதோ, அதுபோலத்தான் இயேசுவையும், அவருடைய உபதேசத்தையும் தங்கள் விருப்பத்தின்படியாகவும், மாந்த அறிவின் படியாகவும் தேடுவது. தேவன் ஒருபோதும் நம்முடைய கணக்கிலே அடங்கமாட்டார். ஆம், நம்முடைய ஞானம், அறிவு, என்பவைகள் அவருக்கு முன்பாகப் பைத்தியமா-யிருக்கிறது. ஆகவே, நம்முடைய அறிவின்படியாக அவரைக் காணமுடியாது என்பதைத் தயவு செய்து தெரிந்து கொள்ளுங்கள்.

எலியா என்ற பழைய ஏற்பாட்டு பக்தனை நாம் அறிவோம். அவன் தேவனைத் தேடினவிதமும், அவனுக்கு தேவன் தன்னை வெளிப்படுத்தின விதமும் I ராஜா.19;9-14 வசனங்களில் வெகு நேர்த்தியாகச் சொல்லப்பட்டிருக்கிறது. முதலில் அவன் பலத்த பெருங்காற்றிலே தேடினான். அங்கு அவர் இருக்கவில்லை. அடுத்து பூமியதிர்ச்சியிலே தேடினான், அங்கேயும் காணோம். பிறகு, அக்கினியிலே தேடினான் அங்கிமிருக்கவில்லை. அதன்பின்பு, அமர்ந்த மெல்லிய சத்தம் உண்டாயிற்று. அங்கே, தேவனை எலியா கண்டான். இதைப் பற்றி நாம் என்ன சொல்லுவது? கப் சிப், அவ்வளவுதான் ! ஏனெனில் அவருடைய வழிகள் ஆராய்ந்து அறிய முடியாதவை (ரோமர்.11;33).

இயேசுக்கிறிஸ்துவையும், அவருடைய உண்மையான உபதேசத்தையும் பின்பற்ற விரும்பும், தேவப்பிள்ளையே, நீ அவரை எங்கே தேடிக்கொண்டுள்ளாய்? அவர் உன்னுடன் பிரயாணம் செய்யவேண்டுமென்று விரும்புகிறாயே, அவருடைய உபதேசம் உன்னிடத்திலே இருக்கிறதா? அவரை வாரந்தோறும் ஆராதித்துக் கொண்டிருக்கிறாயே, உன்னுடைய ஆராதனையில் அவர் இருக்கிறாரா? உன்னுடைய ஆராதனை, அவர் சொன்னபடி, ஆவியோடும், உண்மையோடும், இருக்கிறதா? எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள் என்று உனக்கு கட்டளையிடப்பட்டிருக்கிறதே, (1.தெச.5:21) என்றைக்காவது,. உன் ஆவிக்குரிய வாழ்வில் நீ செய்து கொண்டிருக்கிற காரியங்களைச் சோதித்துப் பார்த்திருக்கிறாயா? எண்ணிப்பார்.

அவர் இல்லாத இடத்தில் அவரை நீ தேடினால், ஒருபோதும் கண்டுபிடிக்க முடியாது. அவர் கொடுக்காத உபதேசமிருக்குமிடத்தில், நீ அவரை ஆராதித்தால், ஒருபோதும், அந்த ஆராதனையை அவர் அங்கீகரிக்கமாட்டார். அது வீணான ஆராதனையாகவே இருக்கும் ஆகவே, நம்முடைய அறிவின்படி அவரைத் தேடாமல், அவர் கொடுத்திருக்கிற உபதேசங்களின் அடிப்படையில், நம்மை இறுதி நாளில் நியாயந்தீர்க்கப் போகிற வசனங்களின் அடிப்படையில் அவரைத் தேடுவோம்.

## III தங்கள் பயணம் ஆரம்பித்த இடத்திற்கே திரும்பினர் (V.45)

மரியாளும், யோசேப்பும் எருசலேமிலிருந்து திரும்பி வந்த பயணம், கற்றுத் தருகின்ற மற்றுமொரு பாடம், தவறவிட்ட ஒன்றைக் கண்டுபிடிக்க, ஒருவன் ஆரம்பித்த இடத்திற்கே திரும்பிச் செல்ல வேண்டும் என்பது.

இயேசுவைத் தவறவிட்டு, அங்குமிங்கும் தேடி அலுத்துப் போன மரியாளும், யோசேப்பும், இனி அவரைக் கண்டுபிடிப்பதற்கு ஒரே வழி எருசலேமுக்குச் செல்வதுதான் எனத் தீர்மானித்து, அங்கே சென்றனர். கொஞ்சம் சிரமப்பட்டாலும், ஒரு வகையாக கடைசியில் கண்டு கொண்டனர். இவர்களிருவரும் மேற்கொண்ட வழிமுறை, நமக்கு விளங்குகிற வழிமுறைதான். அநேகராகிய நாமும் கூட நமது பயணத்தில் எதையாவது தொலைத்துவிட்டால், அதைக் கண்டுபிடிப்பதற்கு இதே வழிமுறையைத்தான் இன்றைக்கும்

பின்பற்றிக் கொண்டிருக்கிறோம், ஆனால், ஆவிக்குரிய பயணத்திற்கு மாத்திரம், இந்த அளவு கோல் வேண்டவே வேண்டாமென்று அடம்பிடிக்கிறோம். ஆரம்பித்த இடத்திற்கு நாம் போகத் தேவையில்லையென்று ஆளாளுக்குப் பேசி, கூட்டம் கூட்டமாகச் சேர்ந்து கூப்பாடு போட்டு, தேவனுக்கு பிரியமில்லாத அநேக காரியங்களை துணிகரமாக நடத்திக் கொண்டிருக்கிறோம். இது எப்படி நியாயமாகும்?

அன்பானவர்களே, இன்றைக்கு கிறிஸ்தவத்திலே காணப்படுகிற இத்தனை பிரிவினைகளுக்கும். ஒவ்வொரு பிரிவினரும் செய்கின்ற முரண்பாடான உபதேசங்களுக்கும் அடிப்படைக் காரணம் என்ன? ஏன், இவ்வளவு குழப்பங்கள்? முதல் நூற்றாண்டிலே, கி.பி. 30வது வருஷத்திலே எருசலேம் பட்டணத்திலே, பெந்தெகொஸ்தே நாளிலே, இயேசுவானவர் வாக்களித்தபடி ஸ்தாபிக்கப்பட்ட சபையையும், அன்றைக்கும், அதைத் தொடர்ந்தும் அப்போஸ்தலர்களைக் கொண்டு பரிசுத்த ஆவியானவராலே கொடுக்கப்பட்ட உபதேசத்தையும் நாம் தவற விட்டுவிட்டோம். இயேசுவை எருசலேமிலே விட்டு விட்டு, யோசேப்பும், மரியாளும் வழிநெடுகத் தேடினது போல, எருசலேமில் ஸ்தாபிக்கப்பட்ட சபையையும், எருசலேம் சுவிசேஷத்தையும் நாம் எருசலேமிலேயே விட்டு விட்டு, அதை நாம் ரோமிலும், இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் தேடிக்கொண்டுள்ளோம்! எருசலேமுக்குப் போய்த் தேடுவதைக் காட்டிலும், வழிநெடுகத் தேடுவது, மரியாளுக்கும், யோசேப்புக்கும் சுலபமாயிருந்ததுபோல, நமக்குத் தோதாகத் தெரிகின்ற இடங்களில், எருசலேமின் சபையையும், எருசலேம் சுவிசேஷத்தையும் தேடுவது சுலபமாயிருக்கிறது. ஆனால், அதிலே என்ன பிரயோஜனம் சொல்லுங்கள்.

இயேசு உன் வாழ்க்கையில் வேண்டுமானால், அவர் கட்டின சபை உன் வாழ்க்கையில் வேண்டுமானால், அவர் கொடுத்த உபதேசம் உனக்கு ஆத்தும இரட்சிப்பைக் கொடுக்க வேண்டுமானால், அந்த ஆத்தும இரட்சிப்பு உனக்கு சமாதானத்தையும், ஆசீர்வாதத்தையும் கொண்டு வரவேண்டுமானால், அந்த இரட்சிப்பை நீ கடைசி பரியந்தம் காத்துக்கொள்ள வேண்டுமானால், அந்த இரட்சிப்பு உனக்கு பரலோக பாக்கியத்தைப் பெற்றுத் தர வேண்டுமானால், நீ எருசலேமின் சபையையும், எருசலேமின் சுவிசேஷத்தையும் கண்டுபிடித்தே ஆகவேண்டும். எருசலேமின் சபையாகிய கிறிஸ்துவின் சபைதான், இயேசுக்கிறிஸ்து, கி..பி.30 -ல் கட்டின உண்மையான சபை. ஒருவேளை, இன்றைக்கு, நீ எந்தவொரு பிரிவுச் சபையின் அங்கமாக இருந்தாலும், அது, கி.பி. 30.க்குப்பிறகு, எருசலேமுக்கு வெளியே மனிதனால் கட்டப்பட்ட சபையாகவே இருக்கும். அதைப்போலவே, நீ விசுவாசித்து (மாற்கு.16:15), மனந்திரும்பி (அப்.2:38) இயேசுக் கிறிஸ்து தேவனுடைய குமாரனென்றும் அறிக்கையிட்டு (அப்.8.37) பாவமன்னிப்பிற்கென்று தண்ணீரில் முழுகி

ஞானஸ்நானம் (கொலோ.2:12,தீத்து.3:5) பெற்றிருந்தால் மாத்திரமே, உன் இரட்சிப்பு எருசலேம் சுவிஷேத்தினபடியானது. வேறு வகையில் நான் இரட்சிக்கப்பட்டிருக்கிறேன். என்று நீ எப்படி கூறினாலும், அது எருசலேம், சுவிஷேத்தின்படியானதல்ல. இது நிச்சயம்.

பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்ஜியத்தில் பிரவேசிப்பான் என்று இயேசு கூறியுள்ளார். (மத்.7:21). அந்தப் பிதாவின் சித்தப்படிதான் இயேசு பூமிக்கு வந்தார் (யோவான்.3:16). அந்தப் பிதாவின் சித்தப்படிதான் சிலுவையில் இரத்தம் சிந்தினார். (அப்.20:28). பிதாவின் சித்தப்படிதான் இயேசு சபையை ஸ்தாபித்தார். (மத்.16:18 அப்.2:1,47). பிதாவின் சித்தப்படிதான் பரிசுத்த ஆவியானவர் கொடுக்கப்பட்டார். (அப்.2:1-4) பிதாவின் சித்தப்படிதான் பரிசுத்த ஆவியானவர் வசனத்தை கொடுத்தார். (II.தீமோ.3:16,7) அந்த வசனம்தான் **கிறிஸ்துவின் சபை**, எருசலேமில் ஆரம்பிக்கப்பட்ட சபை என்றும், அது போதிக்கும் இரட்சிப்பின் திட்டம்தான். எருசலேம் சுவிசேஷத்தின்படியானது என்றும் கூறுகிறது. அப்படியானால், இதன்படி செய்யாமல் பிதாவின் சித்தத்திற்கு ஏன் எதிர்த்து நிற்கிறீர்கள் ? வேண்டாம். நித்திய வாழ்வை விலையாகக் கேட்கும் இந்தத் துணிகரம் தயவு செய்து வேண்டாம்.

ஆகையால், அருமையானவர்களே, இயேசுக்கிறிஸ்துவின் சபையையும், அவருடைய மூல உபதேசத்தையும் நாம் தவறவிட்டு விட்டு, வேறு எங்கேயாவது அதைத் தேடிக் கொண்டிருப்போமானால் நம்முடைய வீணான முயற்சிக்கு இன்றே முடிவுகட்டி விட்டு, எருசலேமின் சபையாகிய கிறிஸ்துவின் சபைக்கும், எருசலேமின் உபதேசமாகிய புதிய ஏற்பாட்டின் உபதேசத்திற்கும் திரும்புவோம் ஆமென்.

**செ. ராஜநாயகம்.**

## கடலில் குடிதண்ணீர்

யோபுவிடம் தேவன் இப்படிக் கேட்கிறார். "Hast thou entered into the Springs of the Sea" (யோபு.38:16). உண்மையாகவே கடலுக்கடியில் நீருற்று உண்டா? ஆம் இருக்கிறது! இதை முதன் முதலில் கண்டு பிடித்தவர் ரோமப் புவியியலாளர், ஸ்ட்ராபோ (Strabo) (63 கி.மு. -21.கி.பி.) என்பவர் 1976-ல் அமெரிக்க பூமியியல் ஆராய்ச்சியாளர்கள், அட்லாண்டிக் கடலோரத்தில், நியூ இங்கிலாந்திலிருந்து - ஜார்ஜியா வரை "**நல்ல தண்ணீர்**" உள்ளதாகக் கண்டுபிடித்துள்ளனர். இந்த ரகசியங்களெல்லாம் யோபுவுக்கு எப்படித் தெரிந்தது?

# உங்களுக்காக

# நான்கு வேதாகமக் கேள்விகள்


ஒரே ஒரு சபை மாத்திரமே இருப்பதாக வேதாகமம் சொல்லுகிறது. (எபேசியர் 4:4 கொலேசேயர் 1:18). எப்படியோ உலகில் இன்று அநேக சபைகள் தோன்றி விட்டன, எனவே வேதம் கூறும் ஒரே சபை எது என்பதை எப்படி ஒருவர் அறிந்து கொள்ளக்கூடும், என்ற கேள்வி எழும்புகிறது. எல்லா சபைகளுமே தேவ வசனத்தின்படியே இருப்பதாக கூறிக்கொள்வர். ஒரு சபை மட்டுமே இருப்பதாக வேதம் கூறுமேயாகில், பிறகு எல்லா சபைகளுமே கர்த்தருடையது-தான் என்று கூறிவிட முடியாது என்பது இயல்பு. எனவே உண்மையான சபை எது என்று அறிய சாதாரணமாக நான்கு கேள்விகள் நீங்கள் கேட்க வேண்டியதாயிருக்கும். இன்னும் அநேக கேள்விகள் கேட்கப்படலாம். ஆனால், எது உண்மை, எது போலி என்று அறிய நான்கு கேள்விகளில் ஆராய்ச்சி போதுமானது.

கேள்விகளை ஒவ்வொன்றாகக் கேட்டு, அவைகளுக்கு வேதம் கூறும் பதில்களை இப்பொழுது காண்போம்.

**1. சபையை ஸ்தாபித்து யார்?** கிறிஸ்துதான் சபையை ஸ்தாபித்தார் என்று நாம் எல்லோருமே ஒப்புக்கொள்வோம் என்று நான் நம்புகிறேன். கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்ட பின், அதற்கு மாறுத்தரமாக கிறிஸ்து. **"நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன், பாதாளத்தில் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை,"** என்றார் (மத்தேயு 16:18). கிறிஸ்து சபையை ஸ்தாபிப்பதாக உறுதி கூறியிருந்தால், கிறிஸ்து சபையை ஸ்தாபித்திருக்க மாட்டாரா? நிச்சயமாக ஸ்தாபித்திருப்பார். மேலும் கிறிஸ்து (ஒரு) சபையை ஸ்தாபிப்பதாகக் கூறினாரேயன்றி (பல) சபைகளை ஸ்தாபிப்பதாகக் கூறவில்லை. எனவே அவர் ஒரு சபையை மட்டுமே ஸ்தாபித்தார். பிறகு அது தமக்கு சொந்தமான சபை என்று கூறினார். ''என் சபை'' என்று அவர் கூறியிருப்பதால், அது உங்களுடையதாகவோ, என்னுடையதாகவோ, இருக்க நிச்சயமாக வாய்ப்பில்லை.

**2. சபை எங்கே ஸ்தாபிக்கப்பட்டது?** அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்தின்படி, சபை எருசலேமிலே ஸ்தாபிக்கப்பட்டது. நமக்கு எப்படித் தெரியும்? ஏனெனில் கிறிஸ்து தமது அப்போஸ்தலர்களை உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரை எருசலேமில் இருக்கும்படி கட்டளையிட்டார். (லூக்கா 24:29), அந்த வல்லமை வந்தபோது அவர்கள் எருசலேமிலே காத்திருந்தனர்.

(அப்போஸ்தலர்2:1-4), அதுமாத்திரமல்ல, இராஜ்யம் அல்லது சபை எருசலேமிலே ஸ்தாபிக்கப்படும் என்று ஏசாயா தீர்க்கதரிசி முன்னுரைத்திருந்தார் (ஏசாயா 22-3).



**3. சபை எப்பொழுது ஸ்தாபிக்கப்பட்டது?** அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ளபடி, சபை எருசலேமிலே ஸ்தாபிக்கப்பட்டிருந்தால், அது ஏறத்தாழ கி.பி. 33 என்று குறிப்பிடப்படுகிறது. அதாவது கர்த்தருடைய (ஒரே உண்மையான) சபை ஸ்தாபிதம் ஆகி இன்று ஏறத்தாழ இரண்டாயிரம் வருட-மாகிறது. என்று பொருள்.

**4. அது என்ன (பெயரை) நாமத்தைத் தரித்துக் கொள்கிறது?** தனிப்பட்ட ஒவ்வொரு அங்கத்தினரும் கிறிஸ்தவர்கள் என்றழைக்கப்படுகின்றனர் (அப்போஸ்தலர் 11:26:26:28:1 பேதுரு 4:16). அனைத்து கிறிஸ்தவர்களும் ஒன்று சேர்ந்து சபையாக வடிவம் பெறுகின்றனர். வேத வசனங்களில் இது கிறிஸ்துவின் சரீரமாக குறிப்பிடப்படுகிறது. (I கொரிந்தியர் 12:27), அந்த சரீரம் சபையே (கொலோசேயர் 1:18), ஆதலால், இதுவே கிறிஸ்துவின் சபையாகும். ஆங்காங்கு இருந்த பிராந்திய சபைகள் பவுலின் நாளிலே கிறிஸ்துவின் சபை என்று அழைக்கப்பட்டன. (ரோமர்.16:16). கிறிஸ்து சபையை ஸ்தாபித்திருந்தால், இயல்பாகவே சபை அவருடைய நாமத்தைத் தரித்துக்கொள்ள வேண்டும். கிறிஸ்துவின் சபையாக அது இல்லாமலிருக்குமானால், பிறகு அது யாருடைய சபையாக இருக்கக்கூடும்? கிறிஸ்துவின் பெயரைத் தரித்துக் கொள்ளாமலேயே, அது அவருடைய சபையாக இருக்கக்கூடுமா? நிச்சயமாக இருக்காது.

மேற்குறித்த நான்கு எளிமையான கேள்விகளுக்கும், வேதம் அளிக்கும் எளிமையான பதில்கள் இவைகளே. ஒரு சபை கிறிஸ்துவின் சபைதானா, இல்லையா என்பதை அறிய விழைந்தால், அதைக் குறித்த இக்கேள்விகளைக் கேட்டுக் கொள்ளுங்கள். அதற்குப் பதிலையும் கண்டறியுங்கள். ஒரு சபை தன்னை கிறிஸ்துவின் சபை என்றும் அழைத்துக் கொள்ளக்கூடும், ஆனால் அது மனிதனால் ஸ்தாபிக்-கப்பட்டிருக்குமானால், அது கர்த்தருக்கு உரியதாக இருக்க இயலாது. அது லண்டனிலோ, அமெரிக்காவிலோ அல்லது உலகின் வேறு எங்காவது ஸ்தாபிக்-கப்பட்டிருக்குமானால் அது எப்படி கிறிஸ்துவின் சபையாக இருக்கக் கூடும்? கடந்த சில நூற்றாண்டுகளுக்குள்ளாக இது ஸ்தாபிக்கப்பட்டிருந்தால் அது கர்த்தருடைய சபையாக இருக்க வாய்ப்பில்லை. இறுதியாக, மனிதப் பெயர்கள் சபைக்கு கொடுக்கப்பட்டிருக்குமாயின், அது முற்றிலும் பிரிவினைச் சபையே. எனவே, சபை தேவனால் ஸ்தாபிக்கப்பட்ட ஒன்றா அல்லது மனிதனால் ஸ்தாபிக்கப்பட்ட ஒன்றா என்பதை சோதித்து அறிதலின் முக்கியத்துவத்தை நீங்கள் காண முடிகிறதா? இவ்வித சுய சோதனை எப்பொழுதும் தவறாது.

எனது நண்பரே, நீங்கள் கிறிஸ்துவின் சபை அங்கத்தினர்களா? மேற்குறித்த நான்கு கேள்விகளையும் உங்களையே நீங்கள் கேட்டு சோதித்தறியுங்கள். நீங்கள் அப்படிச் செய்து, நீங்கள் ஒரு பிரிவுக்(நாமகரணக்)கூட்டத்தில் இருப்பதாக கண்டறிவீர்களானால், உங்கள் வேதத்தை நன்கு கற்று, கர்த்தருக்குக் கீழ்படியும்படி உங்களை கேட்டுக் கொள்கிறோம். வேதம் போதிப்பதை நீங்கள் செய்வீர்களானால், கர்த்தர் உங்களை இரட்சித்து, வேறொரு சபையில் சேர்க்காமல், தமது சபையில் சேர்த்துக் கொள்வார். ஆதலால் கவலைப்படாதீர்கள். அவர் தமது சபையை அறிவார். இதிலேதான் அவர் உங்களைச் சேர்த்துக் கொள்வார்(அப்போஸ்தலர் 2:47), அப்பொழுது நீங்கள் வேதாகமத்தில் வாசிக்கிற அந்த சபையில் அங்கமாவீர்கள், ஆதலால், இனியும் நான் இந்த சபை, அந்த சபை என்று சாக்கு போக்குச் சொல்லிக் கொண்டிருக்க மாட்டீர்கள். மாறாக, கர்த்தருக்கு இருக்கிற ஒரே சபையில் நீங்கள் அங்கத்தினராயிருப்பீர்கள்.

**J.C. CHOATE** **J.C. சோட்**

## சிலை பேசுகிறது

ஒருமுறை, மேத்யூ பான்டைன் மௌரி (1806 - 1873), நீண்ட நாள் உடல் நலக்குறைவுக்கு உள்ளாகி படுத்த படுக்கையாகிவிட்டார். அவர் தன்னுடைய மகனை வேதாகமத்தை எடுத்து தனக்காக வாசிக்கும்படி கேட்டார். அவன் 8 - ம் சங்கீதத்தை எடுத்து வாசித்து, தகப்பனாரின் கவனத்தை ஈர்த்தான். 8:8 - ல் ஆங்கில வேதாகமத்தில், " the birds of the heaven, and the fish of the Sea" இந்த " Paths of the Sea", என்பதை இதற்கு முன் மௌரி கவனித்ததில்லை. இந்த வசனத்தில் உள்ள "Paths" என்பதை அடிப்படையாக வைத்து, "கடலின் வழிகளைக் கண்டுபிடிக்க" முடிவு செய்தார். அதைக் கண்டே பிடித்துவிட்டார். காற்றும், தண்ணீரும் ஒன்றையொன்று சார்ந்து, சுற்றிச் செல்லும் ஒரு பாதை ஒழுங்கு உண்டென்பதை முதலில், அங்கீகரித்தவர் இவர்தான். இவர் எழுதின "Oceanography" தான், இது சம்பந்தமான மேற்படிப்புக்கு இன்றும் ஆதாரமாக உள்ளது.

இவருக்கு அமெரிக்காவில் உள்ள அவருடைய சொந்த மாநிலமான வெர்ஜினியாவில் ஒரு சிலை வைத்துள்ளனர். சிலையின் அடியில் சங்கீதம் 8:8 என்று எழுதி "தேவனை அவருடைய வார்த்தையால் ஏற்றுக் கொண்டவர்"("Took God at His Word") என்று எழுதியுள்ளனர். சரி, இந்த மாபெரும் உண்மை எப்படி சங்கீதக்காரனுக்கு தெரிந்தது? குருட்டு அதிர்ஷ்டமா? இல்லை, இல்லை தேவ ஞானமே.

*ஜெபியுங்கள்!* *திட்டமிடுங்கள்!* *பங்குபெறுங்கள்!*



**காங்கேயம் கிறிஸ்துவின் சபையாரும்**

**உலக வீடியோ வேதாகமக் கல்லூரியும்**

இணைந்து நடத்தும்

# நான்காம் வேதாகம கருத்தரங்கம்

## (FOURTH ANNUAL BIBLE LECTURESHIP)

நாள் : ***அக்டோபர் 25,26 - 2001***
***வியாழன், வெள்ளி (அரசு விடுமுறை நாட்கள்)***

நேரம் : ***தினமும் காலை 9.00 - 12.30 மணி வரை***
***மாலை 2.00 - 5.00 மணி வரை***

இடம் : ***கிறிஸ்துவின் சபை வளாகம்***
தாராபுரம் ரோடு, காங்கேயம் - 638 701.

**பேச்சாளர்கள் : *தெரிந்தெடுக்கப்பட்ட தேவதாசர்கள்***

வெளியூர்களிலிருந்து வருபவர்களுக்கு உணவும்,
தங்குமிடமும் இலவசம்

**பதிவுக்கட்டணம் ரூ. 25/- மட்டுமே**

தங்குவதற்கு ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனி
இடவசதி உண்டு.

*தொடர்பு முகவரி :*

**கிறிஸ்துவின் சபை**
தாராபுரம் ரோடு, காங்கேயம் - 638 701.
போன் : 04257 - 20030

# "ராகாப்"

பழைய ஏற்பாட்டிலே 'வேசி' என்று அழைக்கப்பட்ட ராகாப், வெகு காலங்கள் கழித்தும் புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டிருப்பது, விளங்கிக் கொள்வதற்கு கொஞ்சம் கடினமான ஒன்றாக உள்ளது. இயேசு கிறிஸ்துவின் வம்ச வரலாற்றில் ராகாப் பெயர் இடம் பெற்றுள்ளது.

"சல்மோன் போவாசை ராகாபினிடத்தில் பெற்றான் ..." (மத்.1:5) அது மாத்திரமல்ல, விசுவாசிகளின் பட்டியலிலும் ராகாப் இடம் பிடித்து விட்டாள்.

"விசுவாசத்தினாலே ராகாப் என்னும் வேசி வேவுகாரரை சமாதானத்தோடே ஏற்றுக் கொண்டு, கீழ்ப்படியாதவர்களோடே கூட சேதமாகாதிருந்தாள்" (எபி.11:31).

"அந்தப்படி ராகாப் என்னும் வேசியும், தூதர்களை ஏற்றுக்கொண்டு வேறு வழியாய் அனுப்பிவிட்டபோது, கிரியைகளினாலேயல்லவோ நீதியுள்ளவளாக்கப்பட்டாள்" (யாக். 2 : 25)

இந்த ராகாப் என்பவள் யார் என்றால், இஸ்ரவேலர் கானான் தேசத்தில் பிரவேசித்த காலத்தில் எரிகோ பட்டணத்தை வேவுபார்க்க வந்த இரண்டு எபிரேய வேவுகாரரை உபசரித்து, அப்பட்டணத்தாரின் கைக்கு அவர்களைத் தப்புவித்த ஒரு பெண். இவளைப் பற்றியதான இந்த விபரத்தை யோசுவா 2ம் அதிகாரம் 1 முதல் 21 வசனப் பகுதிகளில் நாம் காண முடியும். வேசி என்றால் "அந்நிய ஸ்தீரிகள்" என்றும் "பரஸ்திரீகள்" என்றும் அழைக்கப்படுகிறார்கள். (நீதி.6:24, 1. ராஜா.11:1).

வேசியாயிருந்த ராகாப், எப்படி பரிசுத்த ஆவியானவரின் கண்களில் கிருபை பெற்று புதிய ஏற்பாட்டில் பேசப்படுகிறாள்? அதற்கு காரணமாயிருந்த அவளுடைய செயல்பாடுகள் என்னென்ன? அவைகளின் மூலம் நாம் கற்றுக்கொள்ளும் பாடங்கள் எவைகள், என்றெல்லாம் இப்பகுதியில் காண்போம்.

**ராகாப் பெரும்பாலான கூட்டத்தைப் பின்பற்றாதவளாய் இருந்தாள் :**

எரிகோவில் குடியிருந்த அனைத்து மக்களும், இஸ்ரவேல் ஜனங்களைப் பற்றி கேள்விப்பட்டு பயந்திருந்தார்கள். ஆனால் அவர்-

களுடைய தேவனாகிய யெகோவாவை அடையாளம் கண்டுகொள்ளாமலும், அவருடைய மகத்துவத்தை உணராமலும் இருந்தார்கள் ஆனால் ராகோபோ யெகோவாவைப் பற்றி நன்கு தெரிந்து வைத்திருந்தாள். (யோசுவா. 2:8-11).



இன்றைக்கு அநேகர் நியாயத்தீர்ப்பையும், நித்திய அழிவுள்ள நரகத்தைப் பற்றியுமான பயத்தைப் பெற்றுள்ளார்கள். ஆனால் அவரை அடையாளம் கண்டு அவருக்கு கீழ்ப்படிய மனமில்லாமல் இருக்கிறார்கள். இவ்வகை-யான மக்கள் அப்:17ம் அதிகாரத்தில் இடம் பெற்றிருக்கும் அத்தேனியர்கள் போன்றவர்கள். நியாயத்தீர்ப்பு பற்றியதான எச்சரிப்பு அவர்களுக்கு கிடைத்தது. ஆனால் மனந்திரும்ப வேண்டும் என்ற முடிவை எடுக்க மனமில்லாமல் போய்விட்டார்கள். (வச.30:32).

இன்னும் சிலர் பேலிக்ஸை போன்றவர்கள். அப்போஸ்தலனாகிய பவுல் வரப்போகிற நியாயத்-தீர்ப்பைப் பற்றி பேசும்போது நடுங்கிப்போன பேலிக்ஸ், அதற்கு கீழ்ப்படியாமல் "வேறு சமயம் பார்க்கலாம் என்று" விலகிப்-போனான் (அப்.24:25). ஆனால் நாம் பார்த்துக் கொண்டிருக்கும், வேசி என்றழைக்கப்படும் ராகாபோ, எரிகோ முற்றுகையிடப்பட்டு மொத்தமாக அழிக்கப்படும்போது தான் மட்டும் காப்பாற்றப்படுகிறாள். ஏன்? இதற்கு காரணம் என்ன? தேவனைப் பற்றிய பயமும், அவருடைய மகத்துவத்தின் மேல் வைத்திருந்த நம்பிக்கையும்தான் இதற்கு காரணம்.

**மிகவும் மோசமான, ஒதுக்கப்-பட்ட பாவிகளையும் இரட்சிக்கும் வல்லமை கொண்டவர் நமதாண்டவர் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கியவள் ராகாப்.**

இன்றளவும், ராகாபை நாம் ஒரு வேசியாகவே நினைத்துக் கொண்டுள்ளோம். வேசித்தனம் என்ற அருவருப்பான பாவத்தை செய்து, குற்ற உணர்வோடு இருக்கும் தன்னை தேவன் இரட்சிக்க மாட்டார் என்று கூட காரணம் காட்டியி-ருக்கலாம். இஸ்ரவேல் மக்களி-டையே சுட்டிக்காட்டும்போது தேவன் இந்த வேசித்தனத்தோடு,

பின்மாற்றமடைவதை ஒப்பிட்டுப் பேசுகிறார். இருந்தபோதிலும், தேவனுடைய விருப்பத்தின்படி செய்தபோது, இந்த வேசி கூட காப்பாற்றப்படுகிறாள்.

இயேசுக் கிறிஸ்து பாவி-களுக்காக, பாவிகளுக்கென்று மட்டும் மரித்தார். (1. தீமோ.1:15, 1.கொரி.15:3 லூக்கா.5:31 லூக்கா.19:10). சுவிசேஷமானது பாவிகளுக்காக கொடுக்கப்பட்டது. பாவம் என்றால் எல்லாம் பாவம் தான். பாவத்தில் இது பெரிய பாவம், சிறிய பாவம், என்று வேறுபாடு இல்லை. வேசித்தனம் என்பது திருட்டை-விட மோசமானதல்ல. ஓரினச் சேர்க்கை என்பது புறங்கூறுவதை-விட மோசமான பாவமல்ல; எல்லா பாவமும் பாவம்தான். எந்த பாவமும் ஒருவனை தேவனிடத்திலிருந்து பிரித்து விடும் தன்மையுடையதாய் இருக்கிறது. சுவிஷேமானது பாவி-யிலும் பிரதான பாவியையும், மோசமான பாவியையும் இரட்சிக்கப் போதுமானதாயிருக்கிறது.

**ராகாப் தான் கொண்டிருந்த விசுவாசத்தை உறுதி செய்தாள்.**

ராகாபுடைய விசுவாசமானது "கண்ணிலே பார்த்து நம்பப்பட்ட விசுவாசமல்ல" வசனம் 10-ல் பார்க்கும்போது "கேள்விப்பட்டோம்" என்று கூறுகிறாள். இன்றைக்கு அநேகர், நாங்கள் தேவனைக் காணவில்லை, எனவே நாங்கள் அவரை விசுவாசிக்க மாட்டோம் என்கிறார்கள். ஒரு புறஜாதி ஸ்தீரியாக ராகாப் தான் கேள்விப்பட்ட ஒரே காரணத்தினிமித்தமே, "தேவனாகிய கர்த்தரே, உயர வானத்திலும், கீழே பூமியிலும் தேவனானவர்" என்கிறாள். எரிகோவில் வாழ்ந்த அனைத்து மக்களும் தேவனை நம்பினார்கள். ஆனால் நம்பிக்கையின் பேரில் செயல்படவில்லை. எனவே அழிந்துபோனார்கள். ராகாபோ விசுவாசித்ததோடு மாத்திரமல்லாமல் விசுவாசத்தின் பேரில் செயல்-பட்டாள். ஆகவே காப்பாற்றப்பட்டாள். தன்னை மாத்திரமல்ல தன் குடும்பத்-தையும் காப்பாற்றினாள். (வச. 12)

இதை வாசிக்கும் அருமையான சகோதரிகளே, ராகாப் நமக்கு அருமையான பாடங்களை கற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கிறாள். எல்லா கிறிஸ்தவ விசுவாசிகளும் ராகாபைபோல குணங்களை பெற்றிருத்தல் நல்லது. வசனம் 6-ல் பார்க்கும்போது அவள் அந்த வேவுகாரர்களை மிகவும் சிரமப்-பட்டு வீட்டின் மேல் பரப்பப்பட்ட சணல் தட்டைகளுக்குள்ளே மறைத்து வைத்தாள். இதில் தேவனுக்கடுத்த காரியங்களில் ராகாப் மேற்கொண்ட பிரயாசங்கள் நமக்கு பிரயோஜன-மாயிருக்கிறது. தான் மட்டும்

காப்பாற்றப்பட்டால்போதாது, தன் வீட்டாரும் காப்பாற்றப்பட வேண்டும். (வச.12) என எண்ணினாள். நாமும் கூட தேவனுக்கு கீழ்ப்படியும் போது தகுதியே கொஞ்சமும் இல்லாத நம்மையும் அவர் எடுத்து உபயோகப்படுத்துகிறார்.

பிரியானவர்களே! கிறிஸ்தவர்களாக மாறும் அளவுக்கு இவர்கள் நல்லவர்கள் அல்ல என்று நாம் யாரையும், ஒருபோதும் நினைக்கக் கூடாது. பாவியான ஒருவனையும் தேவன் ஏற்றுக் கொள்கிறார் என்பதற்கு ராகாப் ஒரு சிறந்த சாட்சியாய் விளங்குகிறாள். தேவனுக்கடுத்த காரியங்களில் நம்மை சுற்றிலும் உள்ளவர்கள் பங்கு கொள்ளாவிட்டாலும், நாம் நம்மை அதில் ஈடுபடுத்தி செயல்படவேண்டும். குறிப்பாக, நாம் மட்டும் உண்மை சபையை அடையாளம் கண்டு அதில் அங்கம் வகிப்பதோடும் நிறுத்தி விடாமல், மற்ற அநேகரை சபையில் அங்கமாக, அழைத்துவர வேண்டும்.

ராகாபுடைய செயல்பாட்டை பார்த்த நாம் இதுவரை கர்த்தருக்கடுத்த காரியங்களில் நம்முடைய செயல்பாடு எப்படியிருந்தாலும் இனிமேல் கிரியையுடன் கூடியதும், தீமைக்கு தப்பி காப்பாற்றிக் கொள்ளவும்தக்க செயல்பாடாக இருக்க பிரயாசை எடுப்போம்.

**ரேச்சல் ராஜநாயகம்.**

## உயிர் எங்கே இருக்கிறது?

"மாம்சத்தின் உயிர் இரத்தத்திலிருக்கிறது" என்று மோசே இஸ்ரவேலருக்குச் சொன்னார்(லேவி.17:11-14). ஆம், மோசே, சொன்னது, விஞ்ஞான ரீதியாக சரிதான். ஏனெனில், சிவப்பு அணுக்கள் ஆக்ஸிஜனை எடுத்துச் செல்ல முடியும். இது அதிலுள்ள ஹீமோகுளோபினால் (Hemoglobin) சாத்தியமாகிறது. மனிதனின் இரத்தத்திலுள்ள ஒவ்வொரு சிவப்பு அணுவும் 27 கோடிமூலக்கூறுகளை (Molecules) எடுத்துச் செல்லும் சக்தி படைத்தது. "மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது" என்று இன்று நமக்குத் தெரிகிறது, இரண்டாம் உலகப்போரின் போது இந்த உண்மை தெரிந்திருந்தால், இரத்தக் குறைவால் மரித்த எத்தனையோ பேர் உயிர்களைக் காப்பாற்றியிருக்கலாம். இந்த மாபெரும் விஞ்ஞான உண்மை மோசேக்கு எப்படித் தெரிந்தது? இதுவும் குருட்டு அதிர்ஷ்டமா? இல்லை, தேவ ஞானம்.

# இதன்படியே செய்யக் கடவோம்

எகிப்து நாடெங்கும் அடிமைகளுக்கு விழா ! ஊரெங்கும் விடுதலை உணர்வுள்ளவருக்கெல்லாம் உத்தம நாள் ! இஸ்ரவேலர்களின் வீதிகளிலேயும், வீடுகளிலேயும் மகிழ்ச்சி வெள்ளம்! அண்ட சராசரங்களை படைத்த ஆண்டவனை எதிர்த்த அரண்மனைச் செல்லப் பிள்ளைகள், ஆணவ சொரூபங்கள் ஆட்டங்கண்ட நாள்! அந்த நாள் ஆபிப் மாதம் பத்தாம் தேதி! அன்றைக்கு இரவு கர்த்தருடைய சங்காரத் தூதன் முதற்பேராயிருக்கிற மனிதர் முதல் மிருகம் வரை அதம் பண்ணியதால் எங்கும் சரசரவென சடலங்கள் சரியும் சத்தம்! இஸ்ரவேல் மக்கள் மோசேயின் தலைமையில் எகிப்தின் எல்லை கடந்து, பின் யோசுவா-வின் தலைமையில் யோர்தானைக் கடந்த நிகழ்விலிருந்து ''அன்பு'', ''ஜெபம்'', ''தியானம்'', ''பயபக்தி'', ''போதனை'', ''இரக்கம்'' என்ற கற்களை நாம் சென்ற திங்கள்களில் திரமாக தியானித்துப் பார்த்தோம்.

சேனைகளின் கர்த்தர், தான் நேசித்த இஸ்ரவேல் ஜனங்கள் யோர்தான் நதியை கடக்கும் விதம் பற்றி தெளிவான கட்டளைகளை யோசுவாவிடம் தந்தார். அப்படி இவர்கள் யோர்தானைக் கடக்கையில், **"....... கர்த்தர் யோசுவாவுக்கு கட்டளையிட்டவையெல்லாம் செய்து முடியும் மட்டும், பெட்டியைச் சுமக்கிற ஆசாரியர் யோர்தானின் நடுவே நின்றார்கள்."** (யோசுவா 4:10). வாலிபர்களே! சுதந்திர தேசமாகிய கானானுக்கு சென்று கொண்டிருந்த இஸ்ரவேலர்கள், தேவன் சொன்ன வார்த்தையின்படி செய்தார்கள், அல்லது தேவன் சொன்னதைச் செய்து நதி கடக்கையில் ''மாதிரி'' என்ற கல் சுமந்தார்கள். ஆகவே, பரம கானானை நோக்கி யாத்திரை செய்யும் நாம் இத்தரை வாழ்வில் ''மாதிரி'' என்ற கல் சுமக்க வேண்டும் என்ற பெரு நோக்குடன் உங்கள் முன், மாதிரி என்னும் கல் செதுக்கு-கிறேன் கண்டு ரசித்திடுக.

## "மாதிரி" என்னும் கல்

''மாதிரி'' என்ற சொல்லுக்கு பொருள் காண எத்தனிப்போம் என்றால், மனிதர்களாகிய நாம் ஆவிக்குரிய விஷயங்கள் குறித்து தேவன் நமக்கு என்ன கட்டளையை தந்திருக்கிறாரோ அதன்படியே செய்வதாகும். ஒரு பெரிய கட்டடம் கட்டுகிற பொறியியல் வல்லுநர், அக்கட்டத்தின் ஒரு சிறிய வடிவத்தை செய்து, அதன் படியே தான் கட்டும் கட்டடம் வடிவெடுத்து வருகிறதா என்று சீர்தூக்கி பார்க்கிறாரே அது தான் மாதிரியின்படியே செய்வதாகும். கிரேக்கத்தில் ''மாதிரி'' என்ற வார்த்தைக்கு ''டூபாஸ்'' என்ற பதம் பயன்படுத்தப்படுகிறது. ஒரு அரசன், தன் அனுப்பும் கடிதங்களில் தன் முத்திரை மோதிரம் பதிக்கிறானே அதைதான் ''மாதிரி'' (impression) என்கிறார்கள் கிரேக்கர்கள்.

நமது தேவன் கூட, ஆதியாகம புத்தகத்திலிருந்தே இதை மனிதர்களிடம் மிகவும் எதிர்பார்க்கிறார். வாலிபர்களாகிய நாம்! இதை அறிந்து கொள்ள வேண்டும். மனிதன் தன்னை உண்டாக்கின மகாதேவனை விட்டு, திரும்ப முடியாத தொலை தூரத்திற்கு சென்று விட்டான். குயவன் குமுறி குவலயத்தின் மீது வானத்திலிருந்தும், பூமியின் கீழிலிருந்தும் தண்ணீரைக் குவித்தார்.

அப்படி செய்வதற்கு முன், அவருடைய கிருபையின் கண், பாவ கடல் நடுவே, நீதியின் தீவாக மிதந்து கொண்டிருந்த நோவாவின் மேல் பட்டது. அவனையும், அவன் குடும்பத்தையும், சில மிருகங்களையும், காப்பாற்ற தேவன் அவனுக்கு ஒரு திட்டத்தை வெளிப்படுத்தினார். "பேழையைக் கட்டு" என்பதே அத்திட்டம்.

தேவன் நோவாவை கிருபையாகக் கண்ணோக்கி "கட்டு பேழையை" என்று மாத்திரம் சொல்லாமல், அதற்கான அளவு, எத்தனை ஜன்னல், கதவு, அடுக்கு, என்ன மரம் என்ற வடிவத்தையும், விவரத்தையும் அவனுக்கு விவரித்துக் கூறினார். நோவாவும் தனக்கு தேவன் கட்டளையிட்ட பணியை 100 வருடம் செவ்வனே செய்து முடித்தபோது, கர்த்தருடைய வேதம் என்ன கூறுகிறது பாருங்கள், **"நோவா அப்படியே செய்தான்....." (ஆதி 6:22)** வாலிபர்களே! கவனித்தீர்களா தேவன் மனிதனாகிய நோவாவுக்கு தந்த பணியை அவர் சொன்னபடியே செய்தான். "அப்படியே" என்றால் "எப்படியே" என்று யோசிக்கலாம், பதில் தருகிறது பரமனின் வேதம், **"தேவன் தனக்கு கட்டளையிட்டபடியெல்லாம் அவன் செய்து முடித்தான்"**. (ஆதி. 6:22). ஆகவே பேழைக்குள் சென்று, ஜலப்பிரவாகத்தில் ஜகம் எல்லாம் அழிந்தபோது, காக்கப்பட்டு ஜெயம் கொண்டவனாக அரராத் மலையின் மீது அகம் மகிழ்ந்தான்.

கானானிய யாத்திரை செய்த இஸ்ரவேல் ஜனங்களை வழி நடத்தின மோசேயிடம் தேவன் ஆசாரிப்புச் கூடாரம் கட்ட வேண்டிய விதம் பற்றி கூறுகையில், **"மலையிலே உனக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரியின்படியே அவைகளை செய்ய எச்சரிக்கையாயிரு"** என்றார். (யாத்.25:40) தேவனுக்கு ஆராதனை செய்யும் முறை பற்றிய "மாதிரி"யைக் குறித்து தேவன் எவ்வளவு கண்டிப்புள்ளவராக இருக்கிறார் என்பதை வாலிபர்களாகிய நாம் உணர்ந்திடல் வேண்டும். பரம கானானிய யாத்திரை செய்யும் நாமும் அவர் நமக்கு கொடுத்த மாதிரியின்படியே ஆராதனை செய்ய வேண்டி எச்சரிக்கப்படுகிறோம்.



யோசுவாவின் தலைமையில் தேவன் காண்பித்த அல்லது சொன்ன மாதிரியின்படியே யோர்தானைக் கடந்த இஸ்ரவேலர்களுக்கு எதிர்த்து நின்றது வானாளவி நின்ற எரிகோ கோட்டை, யெகோவா தேவன் அதே இஸ்ரவேலருக்கு ஒப்புக் கொடுத்தார். அவர்கள் அதை சுதந்திரிக்கும்படி செய்ய வேண்டிய மாதிரியை எடுத்துக் கூறினர். அந்த மாதிரியை நூலின் நுனியளவு கூட தவற விடாமல் பின்பற்றிய போது, தேவன் அவர்களுக்கு மிகப்பெரிய வெற்றியை பெற்றுத் தந்தார்.

ஆடுமேய்த்த தன்னை அரியணையில் அமரச் செய்த அநாதி தேவனுக்கு ஆலயம் எழுப்ப வேண்டும் என்று ஆசை கொண்ட தாவீதிடம் தேவன்

அதற்குரிய அளவின் மாதிரியை தனது அளப்பில்லா அறிவைக் கொண்டு தந்தார். அப்படி மாதிரியை பெற்ற தாவீது, தான் பெற்ற மகனிடம் அதைத் தந்து, தான் கட்ட முடியாத அவ்வாலயத்தை **மகனே! நீ பெற்ற மாதிரியின் படியே கட்ட கவனமாயிரு** என்றான் (1.நாளா. 28:11,12). சாலமோனும் அப்படியே ஆலயத்தையும், ராஜ அரமணையும் நேர்த்தியாக கட்டித் தீர்த்தான் (2.நாளா 8:11)

வாலிபர்களே! நீங்கள் இதுவரையும் வாசித்ததைக் கவனித்தீர்களானால், **ஆவிக்குரிய எல்லா காரியத்திலும் தேவன், அவர் தந்த மாதிரியை பின்பற்ற வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்** என்பதை அறிந்திருப்பீர்கள் என நான் திட்டமாக நம்புகிறேன். பழைய பிரமாணத்தில் மாத்திரமல்ல புதிய பிரமாணமாகிய புதிய ஏற்பாட்டிலும் தேவன் நமக்குத் தந்த மாதிரியின்படியே மார்க்க மற்றும் ஆவிக்குரிய காரியங்கள் இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறார். வாலிபர்களே! இயேசுவே நமக்கு மாதிரியாக எல்லாவிதத்திலும் இருக்கிறார் (யோசுவா.13:15 ரோமர்.15:6:2.பேதுரு 2:21), அவர் சொன்னபடியே செய்வதுதான் பிதாவுக்கும் பிரியமானது என்பதை உணர்ந்திடல் நன்று. .(மத்.17:5)

வாலிபர்ளே, நமது அன்பின் ஆண்டவர் இந்த பூமியில் இருக்கும்போது, "நான் என் சபையைக் கட்டுவேன்" (மத்.16:16:18) என்று வாக்குக் கொடுத்தார். பெந்தெகொஸ்தே நாளில் தான் வாக்குக் கொடுத்ததை நிறைவேற்றி சபையின் கதவுகளை, பேதுருவின் கையில் திறவுகோலை கொடுத்து திறந்து வைத்தார் (அப். 2:38). அன்று முதல் அவர் கட்டின சபை, அசைக்கப்படாத ராஜ்யமாக இந்த பூமியில் இருந்து வருகிறது. அதில் கர்த்தர் இரட்சிக்கப்பட்டவர்களை சேர்த்துக் கொண்டு வருகிறார். **மனிதன் இரட்சிக்கப்படுவதற்கு தேவன் தமது திட்டத்தின் "மாதிரி"யை கொடுத்திருக்கிறார்.** சபையின் ஆராதனைக்கு என்று "மாதிரி"யை நமக்கு தந்திருக்கிறார். கிறிஸ்தவ ஜீவியத்தில் நாம் வெற்றி பெற வேண்டிய "மாதிரி"யை நமக்கு தந்திருக்கிறார்.

வாலிபர்களே! சிந்திப்பீர் நோவா பேழையை மாதிரியின்படி கட்டினான் காக்கப்பட்டான், மோசே ஆசாரிப்புக் கூடாரத்தை தேவன் தந்த மாதிரியின்படி கட்ட எச்சரிக்கையாக இருந்தான், தேவன் அக்கூடாரத்தில் வாசமாயிருந்தார். நீங்களும் நானும், ஆவிக்குரிய ஜீவியத்தில் விவேகமுடையவர்களாக இருக்கவேண்டுமென்றால் தேவன் நமக்கு வேதத்தில் கொடுத்த மாதிரியின்-படியே ஜீவிக்க வேண்டும். தேவன், தனது குமாரனை கொண்டு,நோவாவின் காலத்தைப் போலவே இந்த உலகத்தை அழித்து நியாயந்தீர்க்கப்போகிறபோது நாம் காக்கப்பட்டு தேவன் வாசமாயிருக்கும் பரலோகக் கூடாரம் போய்ச் சேர மாதிரியின்படியே கட்டப்பட்டிருக்கும் கிறிஸ்துவின் சபைக்குள் கடைசிவரை இருந்து இவ்வுலக ஜீவியம் என்னும் நதியை கடந்து போகையில், இஸ்ரவேல் ஜனங்கள் யோர்தானை மாதிரியின்படியே கடந்து "மாதிரி" கல் சுமந்தது போல், வாலிபர்களாகிய நாம் "மாதிரி" கல் சுமப்போம்! பரம கானானை சுதந்தரிப்போம்! ஆமென்!

**ஜே. பிக்கின்ஸ்**

# யோபு ஒரு கண்ணோட்டம்

காலம் : **முற்பிதாக்களின் காலத்திற்கு முந்தின காலமாக இருக்கலாம்.**

ஆசிரியர் : **யோபுவாக இருக்கலாம் என்று பெரும்பாலும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.**

## *இந்நூல் பற்றி*

a) யோபுவின் வாழ்க்கையில் நடந்த துயரமான நிகழ்வுகளுக்கு பின் 140 வருடம் வாழ்ந்திருப்பதால் இந்நூலை அவர் எழுதியிருக்க அதிக வாய்ப்பு உண்டு.

b) யோபுவின் குடும்ப அமைப்புகள், முற்பிதாக்களின் காலத்திற்கு ஒத்ததாக இருக்கிறது.

c) யோபு தன்னுடைய குடும்ப ஆசாரியனாக இருந்துள்ளான்.(1:5)

d) இந்நூல் நியாயப் பிரமாணத்தைக் குறித்து எங்குமே பேசவோ, குறிப்பிடவோ இல்லை.

e) துன்பப்படுதலின் காரணம் பற்றி விளக்கமளிப்பதே இந்நூலின் முக்கிய நோக்கமாகும்.

f) வேதாகமத்தில் எழுதப்பட்ட முதல் நூலாக இப்புத்தகம் விளங்குகிறது.

g) துன்பப்படுதல் பாவத்தின் விளைவாக மாத்திரம் இருக்க முடியாது என்று இந்நூல் நமக்கு எடுத்துரைக்கிறது.

## *இந்நூலின் செய்தி*

1) மனித அறிவு குறைவுள்ளதாக இருக்கிறது.

2) தேவனின் துணை தனக்குத் தேவை என்பதை மனிதன் உணர வேண்டும்.


3) மனிதன், தேவனுடைய ஞானத்தையும், வழியையும் முற்றிலும் சார்ந்திருக்க வேண்டும்.

4) இவ்வுலகப் பொருள் மனிதனுக்கு ஒரு பொருட்டே அல்ல என்பதை அவன் அறிய வேண்டும்.

# லில்லி மலரிலிருந்து ஒரு பாடம்

இயேசுவால் அதிகமாக நேசிக்கப்படும் அன்பான சின்னத் தம்பிகளே, தங்கைகளே! இப்பகுதியில் எழுதப்படும், சிறிய கட்டுரைகள் உங்களுக்கு உற்சாகம் தரக்கூடியதாய் இருக்கும் என நம்புகிறேன்.

இம்மாதம் ஆங்கிலத்தில் லில்லி என்றும், தமிழில் அல்லி என்றும் சொல்லப்படும் மலர் பற்றிப் பார்க்கலாமா?



இயேசுக் கிறிஸ்து தன் அநேக பிரசங்கங்களை வெளிப்புற இடங்களில் (அதாவது காடு, மலைகளில்) செய்து கொண்டு வந்தார். அவர் ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்துக்கு போகும் பொழுது தனது சீஷர்களோடு பேசிக்கொண்டே செல்வது வழக்கம். சில சமயத்தில் அவர் போகும்பொழுது, ஏதாவது ஒரு திறந்த வெளியில் நிற்பார். அப்பொழுது, ஒரு கூட்ட ஜனங்கள் அவர் பேசுவதைக் கேட்க ஆவலோடு கூடி வருவார்கள். இயேசுக் கிறிஸ்து பிரசங்கம் பண்ணும்பொழுது தனது அருகில் ஏதாவது ஒரு பொருள் இருந்தால் அதைச் சுட்டிக் காட்டி, அதைப் பற்றிப் பேசுவது வழக்கம்.

இப்பொழுது நாம் பார்க்கும் செய்தி புகழ்பெற்ற மலைப் பிரசங்கத்தில் இடம்பெற்ற செய்தி. ஒரு சமயம், நான் முன்னே கூறியபடி அவர் தன் அருகில் வகை வகையான காட்டுமலர்களை பார்த்தார். அப்பொழுது அவர், அருகே இருந்த ஜனங்களிடம் காட்டுமலர்கள் எப்படி வளருகிறது என்று கவனித்துப் பாருங்கள் என்று கூறினார். "உடைக்காகவும் நீங்கள் கவலைப் படுகிறதென்ன? காட்டு மலர்கள் எப்படி வளருகிறதென்று பாருங்கள். அவைகள் உழைக்கிறதுமில்லை. நூற்கிறதுமில்லை, என்றாலும் சாலொமோன் முதலாய் தன் சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப் போலாகிலும் உடுத்தியிருந்ததில்லை" என்றார்.

இயேசுவானவர் விவரிக்கும் அல்லிமலர் எப்படி இருந்ததென்று நாம் அறுதியிட்டுக் கூறமுடியாது. அவைகள் ஒருவேளை, "பாப்பி அனிமோன்" என்ற பட்டர்கப்" என்ற குடும்பத்தை சேர்ந்த ஓர் இனமாக இருக்கலாம். இந்த பாப்பி

அனிமோன் என்பது ஒரு பிரகாச-மான அழகு வாய்ந்த மலர் இளவே-னிற்காலங்களில் முதலில் செழித்து வளரும் நிலையை அடைவது இந்தப் பூக்களே.

சரி, இப்பொழுது அந்த கூட்டத்-தில் நீங்களும் ஒருவர் என்று நினைத்துக்கொள்ளுங்கள். அப்பொழுது, அந்த பெரிய போதகர், (இயேசு) உங்களை, பூக்களை பார்க்கச் சொல்கிறார். அவர் ஜனங்களைப்பார்த்து, அவைகள் எவ்வளவு அழகுள்ளது என்று கவனித்துப் பாருங்கள். மனிதனுடைய எந்த உதவியும் இல்லாமல் அவைகள் காட்டில் வளருகிறதைப் பாருங்கள்.

கானகத்திலிருந்தாலும் அவைகள் எதைக் குறித்தும் கவலைப்-படுவதில்லை, தேவன் அவைகள் வளர தேவையானவற்றை கொடுத்து இருக்கிறார். இன்னுமாக, அவர் மழையையும், சூரிய ஒளியையும் அனுப்பி வைத்து, தனக்கு தேவை-யான உணவை தானே உண்டாக்கும் திறனை இந்த அழகிய பூக்களுக்கும் கொடுத்து இருக்கிறார். தேவன் அவைகளுக்கே இவற்றையெல்லாம் கொடுத்திருக்கும்பொழுது, நாம் ஏன் நம் அன்றாட வாழ்க்கை தேவைகளைப் பற்றிக் கவலைப்பட வேண்டும்? தேவன் நம்மேல் அக்கறை கொண்டு இருக்கிறார். நமக்குத் தேவையானவைகளைத் தருவார்.

அவர்கள், தங்கள் அன்றாடத் தேவைகளுக்காக வருத்தப்படுவதை தேவன் விரும்பவில்லை. தங்கள் உடைகள் எவ்வளவு கந்தலாகவும், நிறம் மங்கினதாகவும் காணப்-பட்டாலும் அதைப் பற்றி அவர்கள் கவலைப்படக்கூடாது என்று நினைத்தார். இயேசு, அவர்கள் புகழ் பெற்ற சாலொமோன் ராஜாவைப் போல, சிறந்தவைகளையே உடுத்த வேண்டும் என்ற சிந்தனை கொள்வது தேவையில்லை என்று எண்ணினார்.

இது இன்றைக்கு, நமக்கும் பொருந்தக் கூடியதாக இருக்கிறது. நாம் நாகரீகமான உடைகளை அணிந்து கொண்டிருக்கும் சிலரை பார்க்கக் கூடும். எப்பொழுதும் புதிதாக ஒன்றை தனக்கென கொண்-டிருக்கும் சில நண்பர்கள் நமக்கு இருக்கக் கூடும்.

அவர்களையெல்லாம் பார்த்து, நாம் அவர்களைப் போன்ற சிந்தையை பெற்றுக் கொள்வோ-மானால், நாம் யார் என்பதையும், எதற்காக இந்த பூமியில் இருக்-கிறோம் என்பதையும், பட்டங்-களைப் பறக்க விடுவது போல காற்றிலேவிட்டுவிடுவோம். ஆகவே தான், நமது ஆண்டவர் அந்த மலைப்பிரசங்கத்தில் "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்-கப்படும்" என்று கூறியுள்ளார். (மத்.6:33)

மனப்பாட வசனம் : மத்தேயு 6 : 33

தமிழில் : **ஏபில் ரோஜர் நாயகம்.**

# ஒவ்வொரு பிராந்திய சபையும் கிறிஸ்துவின் கீழ் சுய ஆளுகை அமைப்பைக் கொண்டவை

இயேசு, செசரியா, பிலிப்புவில் தமது சீஷர்களை ஒன்றாக அழைத்தபோது, ஜனங்கள் தம்மை யாரென நினைக்கிறார்கள் என்று கேட்டறிந்து, தமது சபையைத் தாம் கட்டவிருப்பதாக ஒரு மார்க்க ரீதியான உறுதிமொழியை ஏற்படுத்தினார் (மத்.1613-16). பின்னதாக, அப்போஸ்தலர்களுக்கு கட்டளையிட்டு, "உலகமெங்கும் போய் சுவிஷேத்தை பிரசங்கிக்கும்படி" கூறியதன் மூலம், (மாற்கு.16:15). சபையை, ஒரு உலகளாவிய பதமாக உறுதிப்படுத்துகிறார். வசனங்கள் பெரும்பாலும் "சபையை" ஒரு உலகளாவிய, உலகமனைத்தையும் உள்ளடக்கிய, ஒரு தேவ குடும்பமாகவே சுட்டிக் காட்டுகின்றன.

மேலும் புதிய ஏற்பாட்டில் அநேக இடங்களில் உள்ளூர் (பிராந்திய) சபை என்ற நீதியிலே பேசுகிறது பவுல் எழுதிய நிருபங்கள் அந்தந்த குறிப்பிட்ட பட்டணத்தில் இருந்து உள்ளூர் (பிராந்திய) சபையை குறித்தவை. (ரோமர்.1:7,1. கொரிந்தியர்,1:2, பிலிப்பியர்.1:1) அல்லது ஒரு குறிப்பிட்ட ஊரில் இருந்த சபையை அந்த ஊரின் பெயரையும் சேர்த்து குறிப்பிடப்பட்டது.(கலா.1:2).

## உலகளாவிய தலைமையகம் கொண்ட ஒரு கூட்டமைப்பல்ல

கிறிஸ்துவின் சபை முடியாட்சி அமைப்பைக் கொண்டதுதான் என தெளிவாகக் கூறலாம். புதிய ஏற்பாடு கூறும் உலகளாவிய சபைக்கு இயேசுவேயல்லாமல், சகல தலைமைத்துவ மற்றும் சட்டமியற்றுகிற அதிகாரம்

## சுற்றுகிறதா சூரியன்

சங்கீதம்.19:5,6 அநேக உண்மைகளைக் கொண்டுள்ளது. சூரியனைக் குறித்து சங்கீதக்காரன் இவ்விதம் சொல்கிறார். "சூரியன் வானங்களின் ஒரு முனையிலிருந்து புறப்பட்டு, அவைகளின் மறுமுனை மட்டும் சுற்றியோடுகிறது........" வேதாகமத்தைக் குறை கூறுகிறவர்கள், இந்த வசனத்தை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்தி வேதாகமத்தைக் குறை சொன்னார்கள். அதன்பிறகு, மிகச் சமீபமாகத்தான் சூரியன் ஆகாயத்தில் நகர்ந்து கொண்டுள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன், எல்லோரும் நினைத்ததைப் போல், ஒரே இடத்தில்அது இல்லை. சூரியன் 1 மணிக்கு 6,00,000 மைல் வேகத்தில் ஆகாயத்தில் நகர்ந்து கொண்டுள்ளது. இந்த வேகத்தில் நகருமானால், ஆகாயத்தில், தன் பாதையில் (orbit) ஒரு சுற்றுச் சுற்றிவர 22,00,00,000 ஆண்டுகள் பிடிக்கும்.

பெற்றவராக ஒருவரும் நியமிக்கப்படவில்லை. உலகளாவிய சபையின் ஆளுகை அமைப்பு, திருமறைக்கும், அந்தந்த பிராந்திய சபைக்கும் அப்பாற்பட்ட எந்த யுகத்தின் அடிப்படையிலான ஆளுகை அமைப்பையும் வேத வசனங்கள் அனுமதிப்பதில்லை.

ஞானமுள்ள தேவன் உலகளாவிய சபையில் ஒரு தனி மனிதனின் விருப்பப்படியெல்லாம் ஆளுகை செய்ய ஏதுவாக, வரம்பு மீறிய அதிகாரத்தை அனுமதிக்கவில்லை. இராஜ்யத்தில் பெரியவனாயிருக்க விரும்புகிறவன் மற்றவர்களுக்கு தாழ்மையுடன் ஊழியஞ் செய்யும்படி இயேசு வலியுறுத்தினார். அந்தந்த பிராந்திய சபைகளின் திருமறைக்குட்பட்ட வரைமுறைகளுக்கப்பால் ஒரு மனித கூட்டமைப்பின் வாயிலாக மற்றவர்களை ஆளுகை செய்ய விரும்புகிறவர்கள், தேவனுடைய பார்வையில் அவருக்கு முரணாகவே செயல்படுகிறார்கள்.

## உள்ளூர் (பிராந்திய) சபையின் ஆளுகை அமைப்பு

ஒவ்வொரு உள்ளூர் சபையிலும் தேவையான, தேவனுடைய திட்டப்படியான, ஆளுகை அமைப்பே வேத வசனங்கள் போதிக்கின்றன. சகலமும் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் செய்யப்பட, மந்தையை மேய்ப்பதற்கு ஒன்றுக்கும் மேற்பட்ட மேய்ப்பவர்களை தேவன் கட்டளையிட்டுள்ளார். இந்த மேய்ப்பர்கள் வசன ரீதியான மூப்பர்கள் எனவும், (1.பேதுரு.5:1), கண்காணிகள் எனவும் (பிலி.1:1 1.தீமோ.3:1), ஆங்கிலத்தில் பிரிஸ்பைட்டர்கள் (Presbyter) எனவும் (1.தீமோ.4:24), ஓவர்சீயர்கள் (Overseer) (மேற்பார்வையாளர்கள்) எனவும் (அப்.20:28) எனவும் எபேசியர்.4:11 வேத வசனங்கள் தெளிவாக்குகின்றன.

ஒவ்வொரு பிராந்திய சபையும் கிறிஸ்துவுக்குக் கீழ் சுய ஆளுகை அமைப்பை பெறுதல் தேவனுடைய தெய்வீக ஞானத்தால் விளக்கப்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு உள்ளூர் (பிராந்திய) சபையும் அதினதின் முன்னோடிகளைக் கொண்டிருத்தல் வேண்டும். பவுல் எபேசு பட்டணத்து மூப்பர்களை சந்தித்துப் பேசுவதை அப்போஸ்தலர் 20-ம் அதிகாரத்தில் லூக்கா எழுதிவைத்துள்ளார்.(வச.17). இந்த மனிதர்களுக்குப் பவுல் "............ உங்களைக் குறித்தும், பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங் குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்" என்று முக்கியமான கட்டளையைக் கொடுக்கிறார். (வச.28) பிலிப்பி பட்டணத்து சபைக்கு பவுல் தமது நிருபத்தை எழுதியபோது அதை, ".......பிலிப்பி பட்டணத்தில் கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பரிசுத்தவான்கள் அனைவருக்கும், கண்காணிகளுக்கும், உதவிக்காரருக்கும் எழுதுகிறதாவது : என்று எழுதுகிறார் (பிலி.1:1). பவுல் தீத்துவுக்கு எழுதி, "நீ குறைவாயிருக்கிறவைகளை ஒழுங்குபடுத்தும்படிக்கும்,

நான் உனக்கு கட்டளையிட்டபடியே, **பட்டணங்கள் தோறும் மூப்பரை ஏற்படுத்தும்படிக்கும்,** உன்னை கிரேத்தா தீவிலே விட்டுவந்தேனே" என்று கூறுகிறார். இப்படியாக ஒவ்வொரு உள்ளூர் (பிராந்திய) சபையும் அதினதின் மூப்பர்களைக் கொண்டிருந்தது.

அந்தந்த பிராந்திய சபையிலிருந்த மூப்பர்களுக்கென போதிக்கிறதிலும், கண்காணிப்பு செய்வதிலும், ஆளுகை செய்வதிலும், தேவனுடைய மந்தைக்கு மாதிரியாக இருந்து, கவனம் செலுத்துவதிலும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு பிராந்திய சபையும் ஒன்றுக்கு மேற்பட்ட மூப்பர்களைக் கொண்டு இயங்கி வந்தன. ஒரு பட்டணத்திலிருந்த சபையின் மூப்பர்கள் இன்னொரு பட்டணத்திலிருந்த சபையின் மீது எவ்விதத்திலும் அதிகாரம் செலுத்தவோ, பொறுப்பு வகிக்கவோ, செய்யவில்லை. அதேபோல ஒரே பிராந்திய சபைக்குள் இருந்து மூப்பர்கள், அந்த சபையின் மேல் சமமான பொறுப்பும், அதிகாரமும் பெற்றிருந்தனர்.

தேவன் தமது சபைக்கென வகுத்த திட்டம் மிகவும் எளிமையான ஆளுகை அமைப்பு. நடத்தையாலும், முன் அனுபவத்தாலும் தகுதிவாய்ந்த, ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களே நியமிக்கப்பட்டனர். (1.தீமோ.3:17 தீத்து.1:5) மேற்படித் திட்டத்தில் "ஒரு தனிப்பட்ட நபரை பாஸ்டர் " என்று அழைத்துக் கொண்டு சபையில் ஆளுகை செய்வதை உள்ளடக்கியிருக்கவில்லை. "பிஷப்" என்ற பெயரில் மூப்பர்களாகிய மேய்ப்பர்களுக்கு மேலாக தலைமைத்துவம் அளிக்கப்பட்டிருக்கவில்லை.

இன்று பிரிவுக் கூட்டத்தாரிடையே காணப்படும் சினாடுகள் என்றழைக்கப்படும் சமயகுருக்களின் மன்றம், பொதுக்குழு கமிட்டிகள், ஆலோசனைக் குழுவினர் சமயகுரு ஆட்சி, மாநாட்டுக் குழுக்கள், போன்றவற்றின் ஆளுகை அமைப்புகள், திடீரென தோன்றியவைகளல்ல. புதிய ஏற்பாட்டின் மாதிரியை விட்டு விலகிப்போகுதல் சபையின் ஆரம்ப வரலாற்றிலேயே தோன்றி, இன்று அநேக ஆளுகை அமைப்பை தோற்றுவித்துள்ளன. எப்படியிருப்பினும், புதிய ஏற்பாட்டில் கூறப்பட்டதற்கு அப்பால் விலகிப் போகுதல் எதுவாயினும் அது புறக்கணிக்கப்பட வேண்டும்.

## விலகிப் போதலின் ஆரம்பக் கட்டம்

புதிய ஏற்பாடு காட்டும் மாதிரியிலிருந்து விலகிப் போன முதல் சம்பவங்களில் ஒன்று, பிஷப்களின் ஆளுகைக்கு சபை உட்பட்டதாகும். மூப்பர்களில் ஒரு மனிதன் மாத்திரம் பிஷப் என்கிற பட்டம் தரித்துக் கொள்ளவும், (பிஷப் என்ற பதம் எல்லா மூப்பர்களுக்கும் பயன்படுத்தப்படும் பதங்களில் ஒன்று என்பதை விட்டு விட்டு) அந்த நபரை மற்ற எல்லா

மூப்பர்களுக்கும் மேலாக உயர்த்தப்படுவதை அங்கீகரித்தனர். அவர் மற்ற "மூப்பர்களுக்குத் தலைவராக" மாறினார். தொடர்ந்து கி.பி. 150 வது ஆண்டு வரை நியமிக்கப்பட்ட ஒவ்வொரு மூப்பரும் தன்னாட்சி முறையை சபையில் அமுல்படுத்துவது ஒரு பொதுவான மரபாயிற்று.

சபைகள் தங்கள் பகுதிகளில் சுவிசேஷ ஊழியத்தைச் செய்யச் செய்ய, "பிஷப்புகளின்" ஸ்தானம் மென்மேலும் தொடர்ந்து முதன்மைத்துவம் பெற்றது. ரோமாபுரி, அந்தியோகியா அல்லது அலெக்சாந்திரியா போன்ற பெரிய நகரத்து பிராந்திய சபைகள் தங்கள் அருகாமையில் உள்ள சிறிய பட்டணங்களில் பிராந்திய சபைகளை ஸ்தாபிக்கும்போது, அவைகள் தத்து எடுத்துக்கொள்ளப்பட்டு பிஷப்பின் கண்காணிப்பில் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்ற நியதி உருவாயிற்று. இதை நாம் கவனித்தால், ஏற்கனவே தன்னாட்சி புரியும் பெரிய நகரத்து பிஷப்புகளுக்கு, அதிகார செல்வாக்கு கூடுவது நிதர்சனமாகத் தெரிகிறது. இதன் விளைவாகத்தான் (synod) சினாடு என்றழைக்கப்படும் "சமய குருவின் ஆட்சி" தோன்றியது. ஆதலால் அந்த நேரத்தில் ரோமாபுரி அரசியல் பலமிக்கதாயிருந்தமையால், மார்க்க ரீதியான அதிகாரங்கள் அனைத்தும் ரோமாபுரியிலிருந்து வெளிப்படத் துவங்கியது.

இப்படிப்பட்ட பிஷப்புகளின் தன்னாட்சி அமைப்புடன்,இந்த மற்ற மூப்பர்களை விட கூடுதல் அதிகாரம் பெற்ற) பிஷப்புகள், அந்தந்த பிராந்திய சபைகளின் முகவர்களாக ஓரிடத்தில் கூட, ஆலோசனைக் கூட்டம் நடத்தி, எல்லா சபைகளுக்கும் பொதுவான சட்டமியற்றுவதை மேற்கொள்ள ஆரம்பித்தனர். நாளடைவில் அது அந்தந்த பிஷப்புகள் தாங்கள் தங்களின் பிராந்திய சபையிலிருந்து அனுப்பப்படும் முகவர்கள் என்பதை மறந்து, தங்கள் சபையின் மேல் அதிகாரஞ் செலுத்தும் சர்வாதிகாரிகளாக தங்களை பாவிக்கத் துவங்கினர். இப்படியாக, இந்த பிஷப்புகளின் இரகசிய கூட்டங்கள், ஆலோசனைக் கூட்டங்கள், அல்லது சமய குருக்களின் ஆளுகைக் கூட்டங்கள் என்றும் அந்தக் கூட்டங்களின் தீர்மானங்கள், சபைகளுக்கான திருச்சபைச் சட்டம் என்றும் அழைக்கப்பட்டது. இரண்டாம் நூற்றாண்டில்தான் அந்த பிஷப்புகள் தங்களை அப்போஸ்தலர்களின் வாரிசு என்றழைக்கத் துவங்கினர். இப்படிப்பட்ட முயற்சிகள், திருமறையின் ஆதாரமற்ற அதிகாரத்தை அந்த பிஷப்புகள் ஏற்றுக் கொண்டிருந்தனர் என்பதைக் காட்டுகிறது. தங்களை அப்போஸ்தலரின் வாரிசு என்ற அழைத்துக் கொள்வதன் மூலம் தங்களை அப்போஸ்தலருக்கு சமமாக்கிக் கொண்டனர்.

### இப்படி விலகிப் போனதன் விளைவு

தன்னாட்சி செலுத்தும் பிஷப்புகளை தெரிந்தெடுத்த முறை புதிய ஏற்பாட்டு மாதிரிக்கு வெகு தொலைவில் விலகிப் போன தன்மையைக் காட்டுகிறது.

இதுவே இன்றுள்ள கத்தோலிக்கத்தின் மாதிரியான. தலைமை சமயக்குருவின் ஆட்சி அமைப்பு உருவாகக் காரணமாயிற்று. 1870 – ல் வாகன் ஆலோசனை சங்கம், போப்பின் புனிதம் (போப் தவறே செய்யாதவர்) என்கிற கொள்கையை வெளியிடும் அளவுக்கு முழு வீச்சான தவறு உதயமாயிற்று.

தைரியங் கொண்ட மறுமலர்ச்சி முன்னோடிகள், விசுவாசத்தை விட்டு விலகிப் போன சபையை மீட்டமைக்க முயற்சித்தபோது, இதன் விளைவாக, புராட்டஸ்டண்ட் எனப்படும் புரட்சிகர இயக்கம் உருவாயிற்று. இருந்தும், அநேக புராட்டஸ்டண்ட் பிரிவினர், ரோமன் கத்தோலிக்க முறையிலான தலைமை சமயக் குருக்களின் ஆட்சிக்கு வழி வகுக்கும் உபதேசங்களுடன் பிரிந்தனர். கூட்டமைப்பு ஆளுகை முறையைத் தங்களுக்குத் தெரிந்து கொண்டவேறு சிலர், தங்களுக்கு நலமாகத் தோன்றிய ஆளுகை அமைப்பை தங்கள் பிரிவுக் கூட்டங்களில் ஏற்றுக் கொண்டனர். இதன் விளைவாக இன்று உள்ள மார்க்க உலகில் பலதரப்பட்ட "சபைகளின்" ஆளுகை அமைப்பைக் கண்ணுறுகிறோம். இவற்றில் பெரும்பாலும் மனிதர்களின் சுய ஆசாபாசங்களும், தற்பெருமையும் வெளிப்படுகிறதேயொழிய, பவுல் "பட்டணங்கள்தோறும் மூப்பர்களை நியமிக்க வேண்டும்" என்று கூறிய எளிய கட்டளையின் பிரதிபலிப்பாகக் காணப்படுவதில்லை. (தீத்து.1.5)

## இன்றைய வேண்டுகோள்

கிறிஸ்துவின் சபை இன்று புதிய ஏற்பாட்டு சபையின் ஆளுகை அமைப்பிற்குத் திரும்பும்படி வேண்டிக் கேட்கிறது. இன்று இயேசுவே முழுமையான முடி சூடிய இராஜாவாகவும் அனைத்து ஆலோசனைகளையும் நல்கும் தலையாகவும் இருக்கிறார். பிரதான மேய்ப்பனாகிய இயேசுவின் கீழ் அந்தந்த பிராந்திய சபைக்குட்பட்ட அதிகாரம் பெற்று, அந்த வரைமுறையை மீறாத, ஒன்றுக்கு மேற்பட்ட மூப்பர்கள் சபையில் அந்தஸ்தும் பொறுப்பும், அதிகாரமும் பெற்று அந்தந்த சபையைக் கண்காணிப்புச் செய்கின்றனர். (1. பேதுரு.5:4) உலகெங்கிலும் காணும் அனைத்து தேவனுடைய பிள்ளைகளும் கிறிஸ்துவுக்குள் சகோதர சகோதரிகளாயிருக்கின்றனர். இவர்களுக்குள் உயர்வு தாழ்வுகள் இல்லை அந்தந்த பிராந்திய சுய ஆளுகை அமைப்பைப் பெற்று, புதிய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ள எளிய ஆளுகைக்குட்பட்டு ஊழியம் செய்து வருகின்றன.

தமிழில் : **ஆறுமுகம்.**

# புதிய வாழ்க்கை

கிறிஸ்தவத்தில் "புதியதாக" இருக்கும் சில காரியங்களை நாம் மீண்டும் நினைவுபடுத்திக் கொள்வது சாலச் சிறந்தது. "இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின" (II.கொரி.5:17). நான் வைத்திருக்கும் ஆங்கில மொழிபெயர்ப்பு வேதாகமத்தில் "புது சிருஷ்டி" என்கிற வார்த்தைகளுக்குப் பதிலாக "புது சிருஷ்டிப்பாக" என்று காணப்படுகிறது. பாவம் நிறைந்த இவ்வுலக வாழ்விலிருந்து, "கிறிஸ்து இயேசுவுக்குள்" நாம் மாறுகிற நிகழ்வு உண்மையில் ஒரு புதிய சிருஷ்டிப்பாகவே இருக்கிறது. இதை புதிய ஏற்பாட்டின் வேறு இடங்களில், "மறுஜென்மம்" என்று அழைக்கப்படும் "புதிய பிறப்பு" என்று இடம் பெற்றிருக்கிறது. (யோவான்.3:5). கிறிஸ்துவுக்குள்ளான வாழ்க்கையில் இருந்து பிரிக்க முடியாத சில காரியங்களையும் நாம் இப்பொழுது கவனிப்போம்.

## ஒரு "புதிய" பிதா

தேவனைத் தங்கள் பிதாவாக அங்கீகரிப்பதில் கிறிஸ்தவம் தனித்தன்மை உடையதாக இருக்கிறது. பழைய ஏற்பாடு, தேவனை, பிதாவாக 4 முறை மாத்திரமே கூறுகிறது. உபாகமத்தில் ஒரு முறையும், ஏசாயாவில் 2 முறையும், எரேமியா தீர்க்கனின் நூலில் 1 முறையும், குறிப்பிடப்படுகிறது. இயேசு, தேவனை தன் தகப்பன் என்று, 226 முறை குறிப்பிட்டிருக்கிறார். கிறிஸ்து இந்த பூமிக்கு வருவதற்கு முன் "மனிதகுலம்" என்ற பதமேயில்லை என்பதை நீங்கள் கவனித்ததுண்டா? அதற்கு முன்னிருந்த எல்லாவற்றுக்குமே இது புதிதாகவே இருக்கிறது. ஒரு யூதனுக்கு மற்ற எல்லாரும் புறஜாதியாக அல்லது ஒரு நாயைப் போல தங்கள் உறவுக்கு தகுதியில்லாதவர்களாகவே இருந்தார்கள். கிரேக்கனுக்கு, மற்ற எல்லாரும் நாகரிகமற்றவர்களாக இருந்தனர்.

பவுல் மார்சு மேடையில் கூறுகையில், "மனுஷஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி, பூமியின்மீதெங்கும் குடியிருக்கச் செய்து, முன் தீர்மானிக்கப்பட்ட எல்லைகளையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார்" என்கிறார். (அப்.17:26). "எங்கள் பிதாவே" என்று அழைக்கும்படி இயேசு நமக்கு கற்றுக் கொடுத்தார். பாவம் நிறைந்த மனிதனுக்கு, II கொரி.6: 17,18-ல் விடுக்கப்பட்ட அழைப்பைப் போல வேறெங்கும் காண முடியாது. "..........ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய்,

அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது, நான் உங்களை ஏற்றுக்கொண்டு, உங்களுக்குப் பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரரும், குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று சர்வல்லமையுள்ள கர்த்தர், சொல்லுகிறார்".

## ஒரு "புதிய" குடும்பம்

"புதிய தகப்பனை" இப்பொழுது நாம் உடையவர்களாக இருப்பதினால் கிறிஸ்துவுக்குள் இருக்கும் ஒவ்வொருவருக்கும் முழு குடும்பமே மாறுகிறது. நமக்கு இப்பொழுது கர்த்தருக்குள் சகோதர, சகோதரிகள் இருக்கிறார்கள். பூரண சற்குணத்தின் கட்டாகிய "அன்பில்" நாம் இணைக்கப்பட்டிருக்கிறோம். கிறிஸ்து நமக்கு மூத்த சகோதரனாக இருக்கிறார். பழைய பாவ ஜீவியம் முற்றும் மன்னிக்கப்பட்டது. தேவை ஏற்பட்டால், சரீரப்பிரகாரமான உறவுகளிலும் பிரிவு ஏற்படுகிறது. பாவ உலகத்தில் அனுபவிக்க முடியாத ஒரு புதிய ஆசீர்வாத ஐக்கியம் ஏற்படுகிறது. புதிய குடும்பமென்றால், புதிய உறவுகள் - முற்றிலும் மாறுபட்ட சிநேகங்கள் புதிய நண்பர்கள், தேவனை சார்ந்த மக்கள் நமது புதிய ஜீவியத்தின் அங்கமாக மாறி, அதை நல்லதாகவும், அதிக ஆசீர்வாதமானதாகவும், ஆவிக்குரிய ரீதியில் ஐசுவரியமானதாகவும், உண்மையில் "நாம் சந்திக்கிற ஒவ்வொன்றிலும் நமக்கு பங்கு உண்டு" என்பதை உணர்த்தவும் செய்கிறார்கள். இந்த புதிய குடும்பத்தில் இருக்கும். ஒருவன் "ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கங்களை கெடுக்கும்" என்கிற கோட்பாட்டை புரிந்து கொள்வான். "பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகு" (1.தெச.5:22) என்ற ஆலோசனை ஒருவனால் பின்பற்றப்படுகிறது. ஒருவனுடைய பிரதான உறவுகளில் ஒருவராக, மற்ற எல்லாரையும் விட அதிகமாக மதிக்கப்படுகிற "கிறிஸ்து". இருக்கிறார்.

## ஒரு "புதிய" பணி

தேவனுடைய பிள்ளை ஒரு புதிய பணியை செய்ய ஆரம்பிக்கிறான். இந்த நோக்கத்திற்காகவே அவன் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறான். "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு. ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல, ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்." (எபே. 2 : 8-10). உருவக மொழியில் இயேசு கூறுகையில், ராஜ்யம், தன் திராட்சத்தோட்டத்திற்கு வேலையாட்களை அமர்த்தும் வீட்டெஜமானுக்கு ஒப்பாக இருக்கிறது என்கிறார் (மத்.20:1-16). ஆகவேதான், தேவனுக்கு "உடன்

வேலையாட்களாகியிருக்கிறோம்" என்று வாசிக்கிறோம். (1.கொரி.3:9) தேவன் மிகப் பெரிய திட்டங்களை நமக்காக வைத்திருக்கிறார். நாம் செய்ய வேண்டிய அரிய பணிகளை நமக்காக வைத்திருக்கிறார். "புதிய சிருஷ்டிப்பாக" மாறும்பொழுது ஒரு கிறிஸ்தவன் ஏற்றுக்கொள்ளும் பணியை சரியாக செய்யவில்லை என்றால் அவனுக்கு "ஐயோ". இந்த புதிய வாழ்க்கை என்பது, இழந்துபோனதை தேடுவதும், பரிசுத்த ஜீவியம் செய்வதும், சுயநலமில்லாத ஊழியப் பணி ஆற்றுவதும் தேவன் மீது மாறாத விசுவாசம் வைப்பதுமேயாகும்.

## ஒரு "புதிய" குடியிருப்பு

நமது ஆவிக்குரிய மனுஷன் இப்பொழுது மாற்றப்பட்டிருக்கிறான். நாம் இப்பொழுது புதிய இராஜ்யத்துக்குட்பட்டவர்கள். புதிய அரசருக்கு கீழாகவும், ஒரு புதிய உடன்படிக்கைக்கு கீழ்ப்பட்டவராகவும் இருக்கிறோம். நாம் இனி சாத்தானின் இராஜ்யத்தில் இல்லை, மாறாக, நம்மை இருளின் அதிகாரத்திலிருந்து அவருடைய அன்பின் குமாரனுடைய இராஜ்யத்திற்கு உட்படுத்தப்பட்டிருக்கிறோம். (கொலோ.1:13). நாம் இப்பொழுது அந்நியராக இல்லை. எபேசியருக்கு பவுல் எழுதுகையில், "...... அக்காலத்திலே, கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாயிருந்தீர்களென்று நினைத்துக் கொள்ளுங்கள்" என்று கூறுகிறார். (எபே.2:12)

ஒரு சுதந்திர தேசத்தின் குடிமகனாக இருப்பது எவ்வளவு ஆசீர்வாதமான சிலாக்கியம், அது போலவே, பரலோக ராஜ்யத்தின் பிரஜையாக இருப்பது ஒரு மாபெரும் ஆசீர்வாதம். நாம் அசைக்கப்பட முடியாத ராஜ்யத்தில் இருக்கிறோம். "ஆதலால், அசைவில்லாத ராஜ்யத்தைப் பெறுகிறவர்களாகிய நாம் பயத்தோடும் பக்தியோடும் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யும்படி கிருபையைப் பற்றிக் கொள்ளக்கடவோம் (எபி.12:28). யோவான், தான் அந்த இராஜ்யத்தில் இருப்பதாக கூறினான். அவர் கூறும்போது, "உங்கள் சகோதரனும், இயேசுகிறிஸ்துவினிமித்தம் வருகிற உபத்திரவத்திற்கும் அவருடைய ராஜ்யத்-திற்கும் அவருடைய பொறுமைக்கும் உங்கள் உடன் பங்காளனுமாயிருக்கிற யோவானாகிய நான் தேவ வசனத்தினிமித்தமும், இயேசு கிறிஸ்துவைப்பற்றிய சாட்சியினிமித்தமும், பத்மு என்னும் தீவிலே இருந்தேன்." (வெளி.1:9).

நடைமுறையில் இல்லாத ஒன்றில் ஒருவர் எப்படி இருக்கமுடியும், சிலர் எப்படி உட்படுத்தப்பட்டிருக்க முடியும், சிலர் எப்படி அதை பெற்றுக் கொள்ளமுடியும். கொலோசே பட்டணத்து மக்கள், அப்போஸ்தனாகிய யோவான், எபிரேயர்கள், இவர்கள் அனைவரும் இராஜ்யத்தில் இருப்பதாக கூறப்படுகிறது. அவர்கள் அதில் இருந்தால், இராஜ்யமும் கண்டிப்பாக இருக்க வேண்டும். அந்த அசையாத இராஜ்யத்தில் இன்றைக்கு நாம் இருக்கும்படியான சிலாக்கியம் பெற்றிருக்கிறோம்.

## ஒரு "புதிய" வாழ்க்கை

ஒரு புதிய கிறிஸ்தவரின் வாழ்க்கை எல்லா கோணத்திலும் புதிதாகவே இருக்கிறது. எல்லாம் ஒரு புதிய நோக்கத்தோடு நடக்கிறது. எல்லாம் ஆவிக்குரிய சந்தோஷத்திற்காகவே என்ற உன்னத நோக்கம் உருப்பெறுகிறது. எல்லாக்காரியங்களும், "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைக-ளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்." (மத்.6:33) என்ற கோட்-பாட்டிற்கு கீழாகவே நடக்கிறது. பவுல் இதைக் குறித்து ரோமர் 6ம் அதிகாரத்தில் அழகாக வர்ணிக்கிறார். "ஆகையால், என்ன சொல்லுகிறோம்? கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலைநிற்கலாம் என்றுசொல்லுவோமா? கூடாதே. பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்? கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்-பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்திலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப் பட்டோம். ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு, பாவ சரீரம் ஒழிந்து போகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம். மரித்தவன் பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப்பட்டிருக்கிறானே! (ரோமர் 6:1-7).

## ஒரு "புதிய" நம்பிக்கை

நம்பிக்கை இல்லாத வாழ்க்கை எப்படி இருக்கும்? பவுல், நாம் நம்பிக்கையினாலே இரட்சிக்கப்பட்டிருக்கிறோம்" என்று கூறுகிறார் (ரோமர்.8:24). பரலோகத்தை நோக்கிய நமது பயணத்தில் அது நம்மை இரட்சிக்கிற வல்லமை உடையதாக இருக்கிறது. அது பொறுமையை தூண்டுகிறது. சோர்ந்துபோன இருதயத்தை தேற்றுகிறது. பெலவீனனை தாங்கி, துன்பப்படுகிறவனை ஊக்கப்படுத்துகிறது. மரணத்தின் கூரை அகற்றி, கல்லறையை அழிவின்மையின் இடமாக மாற்றுகிறது இந்த நம்பிக்கை.

நாம் அநேக காரியங்களை எதிர்நோக்கிச் செல்கிறபடியால், ஆழமான மற்றும் நிலைநிற்கிற முடிவுகளை எடுப்போம். ஒவ்வொரு நாளும் வேதத்தைப் படித்து தியானிக்க முடிவெடுப்போம். வியாதியஸ்தரை நலம் விசாரித்து ஒரு நாளைக் கடக்கும் நம்முடன் பயணம் செய்கிற ஒருவரிடமாவது அவருடைய ஆத்துமாவைப் பற்றி கூறுவோம். நீங்கள் கிறிஸ்தவராயில்லை என்றால், இன்றைக்கே, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கவும், பாவத்திலிருந்து மனத்திரும்பவும், கிறிஸ்துவுக்குள் புதிய சிருஷ்டிப்பாக எழுந்திருக்க ஞானஸ்நானத்தில் அவரோடேகூட அடக்கம்பண்ணப்படவும் முடிவு செய்யுங்கள்! தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பராக. ஆமென் !

**P. WILMETH** **P. வில்மத்**



# HEAR THE VOICE OF TRUTH

## ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 8.45-9.00 p.m.<br>9.00-9.15 p.m. | Box 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Sun, Mon<br>Tue, Thu | 2.00-2.15 p.m. | Box 80<br>Kakinada - 533001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45-7.00 p.m.<br>5.45-6.00 p.m.<br>5.30-5.45 p.m. | Box 8405<br>Bangalore - 560084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45-4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum - 695034 | P.K. Varghese |



***Please write to these address for Bible Correspondence Courses, Magazines and other Christian Literatures***

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST

REGISTERED NEWS PAPER RNI No. 47661/87 - NEW DELHI
Postal Regn. No. TN/WR/ER/77/2001.
Licensed to Post without Pre Payment No. TN / WR / ERD / 03 / WPP / 2001.

# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

## பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு

## ஓர் இனிய செய்தி.

ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம்.

இது 15 பாடங்களைக் கொண்ட

**ஓர் இலவசப் பயிற்சி.**

இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர்,
அஞ்சல் வழி வேதாகமக் கல்வி,
த.பெ.எண் - 27, காங்கேயம் - 638 701. தமிழ்நாடு, இந்தியா.

Published by **Church of Christ, Kangayam.**
Printed at Konar Printers, Madurai - 625 012. Editor : **S.RAJANAYAGAM,**